துடுப்பாட்டம்

கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

கிரிக்கெட் தமிழ் மாத இதழ்

ஜீலை - 2026 (32 வது இதழ்)

துடுப்பாட்டம் மாத இதழ்

ஜூலை 2026

இன்னிங்ஸ் 3 **ஓவர் 7**

வடிவமைப்புக் குழு

S. பழனி செல்வகுமார் *கா. இராமச்சந்திரன்*

கார்த்திகேயன் *ஞா. மிக்கேல்ராஜ்*

வணக்கம், அன்புடையீர்!

வைபவ் சூர்யவன்சி, ஐபிஎல் போட்டிகளின் போது பேசுபொருளாக இருந்தார். சில வார இடைவெளிக்குப் பிறகு இந்தியா ஏ தொடரின் மூலம் பேசுபொருளாக மாறியுள்ளார். சூர்யவன்சியின் வயது குறித்து ஒருபுறம் கேலி செய்யப்படுகிறது. அதே சமயம் எதிரணி வீரர்கள் அவரை இது ஐபிஎல் இல்லை என்று சீண்டுவதும் நிகழ்ந்து வருகிறது.

ஏற்கனவே பாகிஸ்தான் ஏ அணியினர் சீண்டினர். அதே சமயம் சூர்யவன்சியின் அணுகுமுறை தவறானது, தோல்விக்குப் பிறகு அல்லது ஆட்டமிழந்த பிறகு கோபப்பட்டு சண்டையிடுவது சரியானது அல்ல. தனது ஆயுதமான பேட்டால் பதில் சொல்வது சிறந்தது, அது ரசிகர்களையும் மகிழ்விக்கும். ஆரோக்கியமான போட்டியாக இருக்கும்.

காலமும், வயதும் அனுபவமும் சூர்யவன்சியை மெருகேற்றும் என நம்புவோம்.

அட்டைப்பட வடிவமைப்பு - ராம் குமார்

நன்றி : படங்கள் - இணையதளம்

தரவுகள் - ESPNCricinfo மற்றும் ICC இணையதளம்

தொடர்புக்கு வாட்சப் - +91 80566 09320

Thuduppattam7@gmail.com

X - @thuduppattam

Thuduppattam.blogspot.com

துடுப்பாட்டம்

கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

உள்ளே

1	சிக்ஸர் பதில்கள்	5
2	அட்டைப்படக் கட்டுரை	7
3	கேன் வில்லியம்சன் மரியாதையின் மறுபெயர் - [சி. பூவேந்தன்]	10
4	இந்தியா - ஆப்கானிஸ்தான்	14
5	மும்பை டி20	17
6	ஐபிஎல் புதுமுகங்கள்	20
7	மைல்கல்லை எட்டியவர்கள்	25
8	மத்தியப் பிரதேச பிரீமியர் லீக்	33
9	உலகக்கோப்பை 2026	35
10	கிரிக்கெட் சர்ச்சை	42
11	ஜார்கண்ட் பிரீமியர் லீக்	44
12	டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியல்	46
13	இம்பாக்ட் ப்ளேயர்	47
14	பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா	49
15	பெங்கால் புரோ 20	53
16	மூவேந்தர்கள்	55
17	மகளிர் போட்டி முடிவுகள்	57
18	21ம் நூற்றாண்டின் டாப் 25	63
19	ஜூன் மாதப் போட்டி முடிவுகள்	68
20	இங்கிலாந்து - இந்தியா (மகளிர்)	72
21	வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை	74

துடுப்பாட்டம்
கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

உள்ளே

22	உலகக்கோப்பை லீக் 2 புள்ளிப்பட்டியல்	76
23	விதர்பா பிரீமியர் லீக்	77
24	மாதம் ஒரு மங்கை	79
25	சாதனைத் துளிகள்	81
26	மறக்க முடியாத வீரர் - [சி. பூவேந்தன்]	82
27	மறக்க முடியாத போட்டி - [சு. பழனி செல்வகுமார்]	86
28	முத்தரப்பில் முக்கியமானவை	89
29	ஜூலை மாதப் போட்டிகள்	91
30	பரோடா பிரீமியர் லீக்	93
31	இங்கிலாந்து - நியூசிலாந்து	95
32	பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா	99
33	ஆந்திரா பிரீமியர் லீக்	102
34	ரசிகன்	104
35	கடைசிப் பக்கம்	108

சிக்ஸர் பதில்கள்

ஐபிஎல்லில் 2வது இன்னிங்ஸில் ஒரு பேட்டருக்குப் பதிலாக இன்னொரு பேட்டர் இம்பாக்ட் ப்ளேயராகக் களமிறங்கலாமா?

(மணிமேகலை, ராதாபுரம்)

இம்பாக்ட் ப்ளேயர் விதிமுறை என்பது ஒரு வீரருக்குப் பதிலாக இன்னொரு வீரர் எந்த நேரத்திலும் களமிறங்கலாம் என்பது தான். ஆனால் வெளியேறிய வீரர் மீண்டும் களமிறங்க முடியாது. 11 பேர் பேட்டிங், 11 பேர் பவுலிங் என்பதுதான் விதிமுறை. பேட்டருக்குப் பதிலாக பேட்டர் இறங்கினாலும், கடைசியாகக் களமிறங்கும் பந்துவீச்சாளர் 12வது வீரராகப் பேட்டிங் செய்யமுடியாது. ரிட்டயர்ட் ஹர்ட் முறையில் வெளியேறிய வீரருக்குப் பதிலாக இம்பாக்ட் வீரர் ஆடினால், ரிட்டயர்ட் ஹர்ட் வீரர் மீண்டும் வந்து பேட்டிங் செய்யமுடியாது.

ஒரு நாட்டு அணி ஐசிசியின் நிரந்தர உறுப்பினர் (நமீபியா) இல்லை என்பதால் நேரடியாக விளையாடத் தகுதிபெறவில்லை. என்றாலும் உலகக்கோப்பை நடத்த அந்த நாட்டுக்கு அனுமதி அல்லது வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இதனால் அந்த நாட்டிற்கு என்ன பலன்?

(காமராஜ், ராஜபாளையம்)

உலகக்கோப்பை போன்ற பெரிய தொடரை நடத்துவதால் அந்த நாட்டில் கிரிக்கெட் புத்தெழுச்சி பெறும். போட்டிகளைப் பார்க்க வெளிநாட்டில் இருந்து ரசிகர்கள் வருவதால் அந்த நாட்டின் சுற்றுலாத்துறை வருமானம் ஈட்டும்.

மைதான விளம்பரம் மூலமாக வாரியத்திற்கு வருமானம் கிடைக்கும். அதே சமயம் போட்டி நடத்தும் பிற நாடுகளில் இருந்து அருகில் இருக்கும், அதிக போக்குவரத்து செலவுகள் இல்லாத வகையில் ஐசிசி போட்டி நடத்தும் அணியைத் தேர்வு செய்யும்.

இதே காரணத்திற்காகத் தான் ஐசிசி மினி உலகக்கோப்பை என்ற சாம்பியன்ஸ் டிராபியைத் தொடங்கியது. பங்களாதேஷ் மற்றும் கென்யாவில் முதலிரண்டு தொடர்கள் நடந்தன. பிறகு ஐசிசி அதைக் கைவிட்டது.

அறிமுக டெஸ்ட் போட்டியில் ஆட்டநாயகன் விருது பெற்ற இந்திய வீரர்கள் யார்?

(பிரம்ம நாயகம், முக்கூடல்)

பிரவீன் அம்ரே 1992ல் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான அறிமுகப் போட்டியில் ஆட்டநாயகன் ஆனார். 2006ல் ஆர் பி சிங்கும், 2011ல் அஸ்வினும், 2013ல் ஷிகர் தவான் மற்றும் ரோகித் சர்மாவும், 2018ல் பிருத்வி ஷாவும், 2021ல் ஸ்ரேயாஸ் ஐயரும், 2023ல் யெஜெஸ்வி ஜெய்ஸ்வாலும் அறிமுக டெஸ்ட் போட்டியில் ஆட்டநாயகன் ஆனவர்கள். தற்போது ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் மானவ் சுதர் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

இதில் பிரவீன் அம்ரே, ஆர் பி சிங் மற்றும் யெஜெஸ்வி ஜெய்ஸ்வால் ஆகியோரின் அறிமுகப் போட்டி வெளிநாட்டில் என்பது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் பாகிஸ்தான் அணி 1000வது ஒருநாள் போட்டியில் ஆடியது. வேறு எந்த அணிகள் 1000 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ளன?

(சுலைமான், மதுக்கரை)

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளும் 1000+ ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ளன. இதோ பட்டியல்.

இந்தியா – 1075, ஆஸ்திரேலியா – 1022, பாகிஸ்தான் – 1002,

இலங்கை – 944, வெஸ்ட் இண்டீஸ் – 898, நியூசிலாந்து – 853, இங்கிலாந்து – 823,

தென்னாப்பிரிக்கா – 698, ஜிம்பாப்வே – 593, பங்களாதேஷ் – 461,

அயர்லாந்து – 210, ஸ்காட்லாந்து – 182, ஆப்கானிஸ்தான் – 181, கென்யா – 154,

நெதர்லாந்து – 146, எமிரேட்ஸ் – 132, கனடா – 107,

நேபாள் – 89, அமெரிக்கா – 79, நமீபியா – 75, ஓமன் - 72

பெர்முடா – 35, ஹாங்காங் - 26

ஆசியா 11 – 7, ஆப்பிரிக்கா 11 – 6, ஜெர்ஸி – 5, ஐசிசி 11 – 4, ஈஸ்ட் ஆப்பிரிக்கா – 3

****

அட்டைப்படக் கட்டுரை

ஹர்மன்பிரீட் கவுர்

200 சர்வதேச டி20 போட்டிகளில் ஆடிய முதல் வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார் இந்தியக் கேப்டன் ஹர்மன்பிரீட் கவுர். ஆண்கள் கிரிக்கெட்டில் இன்னும் 200 சர்வதேச டி20 போட்டிகளில் யாரும் ஆடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2009ல் இருந்து சர்வதேசப் போட்டிகளில் ஆடி வரும் ஹர்மன்பிரீட், 37 வயதிலும் தொடர்ந்து கிரிக்கெட் ஆடி வருகிறார். பஞ்சாப் மாநிலத்தில் பிறந்த ஹர்மன்பிரீட் கவுரின் தந்தை கிரிக்கெட் விளையாடக் கூடியவர். சிறு வயதில் கிரிக்கெட் பயிற்சிக்காக 30 கிமீ தொலைவில் இருந்த ஊருக்கு சென்று பயிற்சி பெற்றவர்.

2014ல் மும்பைக்கு இடம்பெயர்ந்துவிட்டார். கேப்டனாக உலகக்கோப்பை வென்ற ஹர்மன்பிரீட், ஐபிஎல் கோப்பை இரண்டு முறை வென்றுள்ளார். இந்த ஆண்டு பத்மஸ்ரீ விருதையும் பெற்றுள்ளார்.

சர்வதேச டி20 போட்டிகளில் 4000+ ரன்களை அடித்துள்ள ஹர்மன்பிரீட், 32 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். ஒரு சதமும் 17 அரைசதங்களும் அடித்துள்ளார்.

12 முறை ஆட்ட நாயகி விருதை வென்றுள்ளார். 3 முறை தொடர் நாயகி விருதையும் வென்றுள்ளார்.

சத்தமில்லாமல் ஒரு மாபெரும் சாதனையை செய்துள்ள ஹர்மன்பிரீட்க்கு துடுப்பாட்டம் குழுவின் வாழ்த்துக்கள்.

ஜோ ரூட்

டெஸ்ட் போட்டிகளில் 14000 ரன்கள் என்ற மைல்கல்லை எட்டியுள்ளார் ஜோ ரூட். டெஸ்ட் போட்டிகளில் அதிக ரன்கள் குவித்தவர்கள் பட்டியலில் ஏற்கனவே 2ம் இடத்தில் இருந்த ஜோ ரூட்க்கு, முதலிடத்தைப் பிடிக்க இன்னும் 1900 ரன்கள் தேவை.

பொதுவாக இங்கிலாந்து வீரர் நீண்ட காலம் கிரிக்கெட் விளையாடுவது அபூர்வம். ஒவ்வொரு ஆண்டும் நிலையான ஆட்டத்தை ஜோ ரூட் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆண்டு - ரன்கள்

2012 - 93

2013 - 862

2014 - 777

2015 - 1385

2016 - 1477

2017 - 966

2018 - 948

2019 - 851

2020 - 464

2021 - 1708

2022 - 1098

2023 - 787

2024 - 1556

2025 - 805

2026 - 319

இந்தப் பட்டியல் ஜோ ரூட்டின் நிலையான ஆட்டத்தைக் காட்டுகிறது.

<u>அணி வாரியாக அவர் அடித்த ரன்கள்</u>

ஆஸ்திரேலியா - 2828

பங்களாதேஷ் - 98

இந்தியா - 3383

அயர்லாந்து - 89

நியூசிலாந்து - 2078

பாகிஸ்தான் - 1487

தென்னாப்பிரிக்கா - 1210

இலங்கை - 1376

வெஸ்ட் இண்டீஸ் - 1513

ஜிம்பாப்வே - 34

இதில் இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கு எதிராக இரட்டை சதம் அடித்துள்ளார்.

ஜோ ரூட் இன்னும் எவ்வளவு காலம் ஆடுவார், சச்சின் சாதனையை முறியடிப்பாரா என்று தெரியாது. ஆனால் இப்போது அவர் தொட்டிருப்பதே பெரிய உயரம் என்பது குறிப்பிடத்தக்கது.

கேன் வில்லியம்சன் – மரியாதையின் மறுபெயர்

- சி. பூவேந்தன்

சில மனிதர்கள் சாதனைகளால் நினைவில் நிற்கிறார்கள். சில மனிதர்கள் வெற்றிகளால் வரலாற்றில் இடம்பிடிக்கிறார்கள். ஆனால் மிகச்சிலரே தங்களின் குணநலன்களால் மக்களின் இதயங்களில் நிரந்தரமாக வாழ்கிறார்கள்.

அந்த அரிய வரிசையில் இடம்பெற்றிருப்பவர் நியூசிலாந்து கிரிக்கெட்டின் பொற்கால நாயகன் கேன் வில்லியம்சன்.

ஆகஸ்ட் 8, 1990 இல் நியூசிலாந்தின் தௌரங்காவில் பிறந்தார் கேன் வில்லியம்சன். சிறுவயது முதலே கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டிய இவர், 2010 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் போட்டியில் சர்வதேச அரங்கில் அறிமுகமானார். அதே ஆண்டு தனது அறிமுக டெஸ்ட் போட்டியிலேயே (இந்தியாவிற்கு எதிராக அகமதாபாத்தில்) சதம் அடித்து, தான் ஒரு நீண்ட தூரம் ஓடக்கூடிய குதிரை என்பதை உலகிற்கு நிரூபித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் அரங்கில் "பேப் 4" (Fab Four - விராட் கோலி, ஜோ ரூட், ஸ்டீவ் ஸ்மித், கேன் வில்லியம்சன்) என்று அழைக்கப்படும் சமகாலத்து நான்கு சிறந்த பேட்ஸ்மேன்களில் வில்லியம்சன் மிக முக்கியமானவர்.

வில்லியம்சனின் பேட்டிங் பார்ப்பதற்கு ஒரு கலை வடிவம் போல இருக்கும். பந்து எவ்வளவு வேகமாக வந்தாலும், அதை மிகவும் தாமதமாக, உடலுக்கு மிக அருகில் வைத்து விளையாடுவது இவருடைய தனிச்சிறப்பு.

- **Late Cut மற்றும் Soft Hands:** பந்தைக் கடினமாக அடிக்காமல், மென்மையான கைகளால் (soft hands) திசைதிருப்புவதில் வல்லவர்.
- **நெருக்கடியைக் கையாளுவதில் கெட்டிக்காரர்:** விக்கெட்டுகள் சரிந்து கொண்டிருக்கும்போது, ஒரு முனையில் சுவராக நின்று அணியை மீட்பதில் இவருக்கு நிகர் இவரே.

2016 ஆம் ஆண்டு பிரண்டன் மெக்கல்லமிற்குப் பிறகு நியூசிலாந்து அணியின் கேப்டனாகப் பொறுப்பேற்றார். மெக்கல்லமின் ஆக்ரோஷமான பாணியிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, "அமைதியான அதேசமயம் ஆழமான" வியூகங்களால் நியூசிலாந்து கிரிக்கெட்டை ஒரு பொற்காலத்திற்கு அழைத்துச் சென்றார்.

இன்றைய வேகமான உலகில் கோபமும், அகங்காரமும், ஆக்ரோஷமும் நிறைந்த உலகக் கிரிக்கெட் மேடையில் பல அதிரடி வீரர்களை நாம் பார்த்திருக்கிறோம். எதிரணிகளை அச்சுறுத்தும் வீரர்களையும் பார்த்திருக்கிறோம்.

ஆனால் அமைதியால் உலகத்தை வென்ற வீரர்களை எண்ணினால், அதில் முதன்மையான பெயர்களில் ஒன்று கேன் வில்லியம்சனுடையது.

அவரது முகத்தில் பெரும்பாலும் புன்னகையே இருக்கும். வெற்றியிலும் தோல்வியிலும் அதே புன்னகை. அதற்குப் பின்னால் ஒளிந்திருந்தது ஒரு மகத்தான மனிதனின் பணிவும், தன்னடக்கமும்.

கையில் பேட் இருந்தபோது அவர் ரன்களை மட்டுமல்ல, ரசிகர்களின் அன்பையும் சேகரித்தார். கேப்டன் பதவியில் இருந்தபோது அணியை மட்டுமல்ல, ஒரு தேசத்தின் கனவுகளையும் சுமந்தார்.

2019 உலகக்கோப்பை இறுதிப்போட்டி கிரிக்கெட் வரலாற்றின் மிகுந்த வேதனையான தருணங்களில் ஒன்றாகும். வெற்றிக்கும் தோல்விக்கும் இடையில் ஒரு நூலிழை மட்டுமே இருந்தது.

உலகக்கோப்பை அவருடைய கரங்களைத் தொட்டுவிட்டு நழுவிச் சென்றது. அந்தக் கணத்தில் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களின் இதயங்கள் உடைந்தன. ஆனால் கேன் வில்லியம்சன் உடையவில்லை.

அவர் அமைதியாக நின்றார், புன்னகைத்தார், எதிரணியை வாழ்த்தினார். அந்த ஒரே தருணத்தில் அவர் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராக இருந்து, உலகம் மதிக்கும் மனிதராக உயர்ந்தார்.

கிரிக்கெட் என்பது வெறும் ரன்களும் விக்கெட்டுகளும் மட்டும் அல்ல; அது மனிதநேயத்தின் வெளிப்பாடும் கூட என்பதை அவர் உலகத்திற்குக் கற்றுக்கொடுத்தார்.

2021 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் வெற்றி அவரது தலைமைத்துவத்தின் உச்சநிலை. பல ஆண்டுகளாக உழைத்த ஒரு அணியை உலக சாம்பியனாக மாற்றிய பெருமை அவருக்கு உரியது. ஆனால் அந்த வெற்றியிலும் அவர் தன்னை முன்னிறுத்தவில்லை. தனது அணியினரையே முன்னிலைப்படுத்தினார். அதுவே கேன் வில்லியம்சன்.

புகழ் அவரைத் தேடிவந்தது; ஆனால் அவர் புகழைத் தேடிச் செல்லவில்லை. சாதனைகள் அவரை அலங்கரித்தன; ஆனால் அவர் சாதனைகளை ஆபரணமாக அணிந்துகொள்ளவில்லை. அவரது பேட்டிங் ரசிகர்களைக் கவர்ந்தது. அவரது தலைமைத்துவம் அணியை உயர்த்தியது. ஆனால் அவரது மனிதநேயம் உலகத்தை வென்றது.

இன்று அவர் மைதானத்தில் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். அவரது பெயருக்கு அருகில் புதிய சாதனைகள் சேரலாம், சேராமல் போகலாம். ஆனால் கிரிக்கெட்டில் மரியாதை, பணிவு, கண்ணியம் ஆகிய வார்த்தைகள் பேசப்படும்வரை, கேன் வில்லியம்சனின் பெயரும் அதனுடன் சேர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கும். ஏனெனில் அவர் வெற்றிகளை மட்டுமல்ல, மனித இதயங்களையும் வென்றவர்.

அவர் ஒரு கிரிக்கெட் வீரர் மட்டுமல்ல, மரியாதையின் மறுபெயர்.

'விளையாட்டு உணர்வு' (Spirit of Cricket) என்றால் என்ன என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். மைதானத்தில் எதிரணி வீரர்களிடம் கூட கோபப்படாமல், ஸ்லெட்ஜிங் (Sledging) செய்யாமல், ஆட்டத்தால் மட்டுமே பதில் சொன்ன மாபெரும் லெஜண்ட் அவர்.

உலகெங்கும் உள்ள ரசிகர்களின் இதயங்களை வென்றவர். அண்மையில் (ஜூன் 2026) சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை அறிவித்து, ஒரு சகாப்தத்தை நிறைவு செய்துள்ளார்.

இந்தியா - ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் ஆடியது. ஆப்கானிஸ்தான் அணி தனது முதல் டெஸ்டை இந்தியாவிற்கு எதிராக 2018ல் ஆடியது. அதற்குப்பிறகு இந்தியாவுடன் இப்போது தான் டெஸ்ட் ஆட வாய்ப்பு கிடைத்தது. 2024ல் ஆப்கானிஸ்தான், நியூசிலாந்து அணியுடன் ஆடவிருந்த டெஸ்ட் நொய்டாவில் தொடர் மழையால் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த முறை கடும் வெயில் நிலவும் நியூ சண்டிகரில் போட்டி நடைபெற்றது.

இந்திய அணி டாஸ் வென்று பேட்டிங் செய்தது. இடதுகை சுழற்பந்துவீச்சாளர்கள் நன்கேயெலியா கரோட்டே மற்றும் மனவ் சுதர் அறிமுகமானார்கள். முதல் நாளில் சாய் சுதர்சன் (81) மற்றும் பண்ட் அரைசதம் அடித்தனர். கேஎல் ராகுல் (100) மற்றும் கேப்டன் சுப்மன் கில் சதமடித்தனர்.

2ம் நாளில் கில் 126 ரன்களும், பண்ட் 81 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். வாசிங்டன் சுந்தர் 52* ரன்கள் அடித்தார். ஆப்கானிஸ்தான் பந்துவீச்சில் அனுபவமின்மை அப்பட்டமாகத் தெரிந்தது. காயம் காரணமாக ஷராபுதீன் அஸ்ரப் பந்துவீசவில்லை. முகமது சலீம் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். கேப்டன் ஹஸ்மத்துல்லா ஷாகிதி தனது முதல் டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்தினார். இந்தியா 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 564 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

பேட்டிங்கிலும் ஆப்கானிஸ்தான் அணி பெரிதாக எதுவும் செய்யவில்லை. இரண்டாம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்தது. 3ம் நாளில் 152

ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அனுபவ வீரர் ரஹ்மத் ஷா அரைசதம் (60) அடித்தார். அறிமுக வீரர் மனவ் சுதர் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பிரசித் கிருஷ்ணா தனது பங்கிற்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்திய அணி பாலோ ஆன் கொடுத்தது. இரண்டாவது இன்னிங்சில் இன்னும் மோசமாக ஆடி 112 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இந்த முறை செடிகுல்லா அடல் 42 ரன்கள் அடித்தார். வாசிங்டன் சுந்தர் 4 விக்கெட்டுகளையும் குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தியா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 300 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - மனவ் சுதர் - 28, 6/33 & 1/29

<u>ஒருநாள் தொடர்</u>

வெள்ளை ஆடையைக் களைந்துவிட்டு, நீல நிற ஆடையணிந்து இரு அணிகளும் தயாராகின. ஆனால் வானம் கருமைநிறம் கொண்டு மழை பொழிய, முதல் போட்டி தாமதமாகத் துவங்கியது. இந்திய அணியில் குர்நூர் பிரார், ஹர்ஷ் துபே மற்றும் ஆப்கானிஸ்தான் அணியில் ஸியா உர் ரஹ்மான் ஆகியோர் அறிமுகமானார்கள்.

25 ஓவர்கள் போட்டியில் ஒரு பக்கம் விக்கெட்டுகள் விழுந்தாலும் மறுமுனையில் அதிரடியாக ஆடி மூவிலக்கம் (102) தொட்டார் ரஹ்மானுல்லா குர்பாஸ். ஆப்கானிஸ்தான் 194 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அறிமுக வீரர்கள் குர்நூர் மற்றும் ஹர்ஷ் துபே தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். அர்ஷதீப் & நித்திஷ் குமார் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். கேப்டன் கில்

(84*), இஷான் கிஸன் (34), ராகுல் (39*) அதிரடி காட்ட, இந்தியா எளிதாக வென்றது.

ஆட்டநாயகன் - சுப்மன் கில் - 84* & 2 கேட்ச்கள்

முதல் போட்டி மலை வாசஸ்தலம் தர்மசாலாவில் நடந்தாலும், 2வது போட்டிக்கு இரு அணிகளும் லக்னோவிற்கு வந்தன. இந்திய அணியில் பிரின்ஸ் யாதவ் அறிமுகமானார். ஆப்கானிஸ்தான் அணியில் ஆல்ரவுண்டர்கள் நபி மற்றும் ஓமர்சாய் இடம்பெறவில்லை. சுப்மன் கில் (154) - இஷான் கிஸன் (125) இணையின் அதிரடியில் 500 ரன்கள் கூட வரலாம் என்று தோன்றியது. ஆனால் இந்திய அணி சொதப்பி 402 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. கரோட்டே 4 விக்கெட்டுகளையும், ரஷீத்கான் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பெரிய இலக்கைத் துரத்திய ஆப்கானிஸ்தான், 232 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. சீனியர் ரஹ்மத் ஷா அரைசதம் (79) அடித்தார். அர்ஷதீப் & குர்நூர் தலா 3 விக்கெட்டுகளையும், பிரின்ஸ் யாதவ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தியா 170 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - சுப்மன் கில் - 154

3வது போட்டி சென்னையில் நடைபெற்றது. ஆப்கானிஸ்தான் முதலில் பேட்டிங் செய்தது. கேப்டன் ஹஸ்மத்துல்லா ஷாகிதி (102) தனது முதல் ஒருநாள் சதத்தை அடித்தார். ஓமர்சாய் அரைசதம் (50) அடித்தார். ஆப்கானிஸ்தான் 218 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. பிரசித் கிருஷ்ணா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சேசிங்கில் ஜெய்ஸ்வால் சதம் (110*), ரோகித் அரைசதம் (79) அடிக்க இந்தியா எளிதாக வென்றது.

ஆட்டநாயகன் - பிரசித் கிருஷ்ணா - 8.2-2-23-5

தொடர் நாயகன் - சுப்மன் கில் - 238 ரன்கள்

மும்பை டி20 லீக்

மும்பை டி20 லீக்கின் 4வது சீசன் ஜூன் 1 முதல் 13 வரை நடைபெற்றது. அனைத்துப் போட்டிகளும் வான்கடே மைதானத்தில் நடைபெற்றன.

அணிகள் - கேப்டன்

பந்த்ரா பிளாஸ்டர்ஸ் - சுவேத் பார்கர்

ஈகிள் தானே ஸ்ட்ரைக்கர்ஸ் - சர்துல் தாகூர்

ஆகாஷ் டைகர்ஸ் - சர்ப்ராஸ் கான்

மராத்தா ராயல்ஸ் - சித்தேஷ் லட்

நார்த் மும்பை பேந்தர்ஸ் - அஜிங்கியா ரஹானே

டிரையம்ப்ஸ் நைட்ஸ் - அஹில் ஹெர்வட்கர்

சோபோ மும்பை பால்கன்ஸ் - ஸ்ரேயாஸ் ஐயர்

அந்தேரி - ஷிவம் துபே

எட்டு அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் நிறைய (இந்திய) சர்வதேச வீரர்கள் பங்கேற்றனர்.

<u>அரையிறுதி 1, ஜூன் 11</u>

ஆகாஷ் டைகர்ஸ் - 150/7

ஜெய் கோகுல் பிஸ்டா - 35

அஸூடோஸ் கார்கே - 2/21

அந்தேரி - 151/5

ஷிவம் துபே - 45*

அஜித் யாதவ் - 2/23

அந்தேரி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - ஷிவம் துபே - 45* & 1/16

<u>அரையிறுதி 2, ஜூன் 11</u>

நார்த் மும்பை பேந்தர்ஸ் - 148

அபிக்யான் குண்டு - 40

துஷார் தேஷ்பாண்டே - 4/21

மராத்தா ராயல்ஸ் - 152/7

சின்மய் ராஜேஷ் சுதர் - 62*

மோகித் அவஸ்தி - 3/35

மராத்தா ராயல்ஸ் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - சின்மய் ராஜேஷ் சுதர் - 62*

<u>இறுதிப் போட்டி, ஜூன் 13</u>

கடைசி ஓவரில் அந்தேரி அணி வெற்றிக்கு 14 ரன்கள் தேவைப்பட்டது. ரோஹன் ராஜே சிறப்பாகப் பந்துவீசி 5 ரன்கள் மட்டுமே கொடுத்தார். 19வது ஓவரை வீசிய இர்பான் உமேர் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதுதான் ஆட்டத்தின் திருப்புமுனை.

மராத்தா ராயல்ஸ் - 154/5

சின்மய் ராஜேஷ் சுதர் - 61

அர்ஜுன் டெண்டுல்கர் - 2/36

அந்தேரி - 146/8

திவ்யான்ஷ் சக்சேனா - 51

ஆதித்யா துமல் - 2/20

மராத்தா ராயல்ஸ் 8 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - துஷார் தேஷ்பாண்டே - 2/33

ஐபிஎல் புதுமுகங்கள்

சென்ற ஆண்டு ஐபிஎல்லில் இந்தியப் புதுமுகங்கள் கலக்கினார்கள். துடுப்பாட்டம் அட்டைப்படத்தில் இடம்பெற்றனர். இந்த ஆண்டில் நிறைய புதுமுகங்கள் ஆடினாலும் போதுமான வாய்ப்பு கிடைக்கவில்லை, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை என்ற நிலையே. இந்த ஆண்டின் ஐபிஎல் புதுமுகங்களை அணி வாரியாகப் பார்ப்போம்.

லக்னோ :

முகுல் சௌத்ரி: லக்னோ அணியில் முகுல் சௌத்ரி அறிமுகமானார். ஒரு போட்டியில் அதிரடியாக ஆடி அணியைக் காப்பாற்றினார். அதற்குப்பிறகு பெரிய அளவில் ஆடவில்லை. 10 போட்டிகளில் ஆடி 170 ரன்கள் அடித்தார். அதிகபட்சம் - 54*.

அக்சத் ரகுவன்சி : அக்சத் ரகுவன்சி மிடில்ஆர்டர் பேட்டராக அறிமுகமானார். 3 போட்டிகளில் 29 ரன்கள் அடித்தார்.

ஜார்ஜ் லின்டே: லக்னோ அணியில் வெளிநாட்டு வீரராக அறிமுகமானார் தென்னாப்பிரிக்காவின் ஆல் ரவுண்டர் ஜார்ஜ் லின்டே. 3 போட்டிகளில் ஆடி 31 ரன்களும், 1 விக்கெட்டும் எடுத்தார்.

மும்பை :

டேனிஷ் மலேவர்: மும்பை அணியில் துவக்கவீரராக டேனிஷ் மலேவர் அறிமுகமானார். 2 போட்டிகளில் ஆடி இரண்டு ரன்களே அடித்தார்.

கிரிஷ் பகத்: மும்பை அணியில் ஆல்ரவுண்டராக அறிமுகமானார் கிரிஷ் பகத். சரியான நேரத்தில் இவருக்கு பேட்டிங்/பந்துவீச்சு வழங்கப்படவில்லை. 3 போட்டிகளில் ஆடிய கிரிஷ் பகத் விக்கெட் எதுவும் வீழ்த்தவில்லை. 10 ரன்கள் அடித்தார்.

மயங்க் ராவத்: மயங்க் ராவத் பேட்டராக அறிமுகமானார். ரன் எதுவும் அடிக்கவில்லை.

ரகு சர்மா: லெக்ஸ்பின்னரான ரகு சர்மா 6 போட்டிகளில் ஆடி 1 விக்கெட் மட்டுமே வீழ்த்தினார். எகானமி - 8.66.

அல்லா ஹசன்பர்: சென்ற ஆண்டு காயம் காரணமாக வெளியேறிய ஹசன்பர் இந்த ஆண்டு ஆடினார். 11 போட்டிகளில் ஆடி 15 விக்கெட்டுகளை வீழ்த்தினார். எகானமி - 10.01.

சென்னை :

கார்த்திக் சர்மா: விக்கெட்கீப்பரான கார்த்திக் சர்மா, ஏற்கனவே விக்கெட்கீப்பர்கள் இருந்ததால் பேட்டராக அறிமுகமானார். இம்பாக்ட் சப்ஸ்டியூட்டாகப் பயன்படுத்தப்பட்டார். கார்த்திக் சர்மா 11 போட்டிகளில் ஆடி 292 ரன்கள் அடித்து அணியில் நிலையான இடத்தைப் பிடித்துள்ளார். இரண்டு அரைசதங்கள் அடித்துள்ளார்.

பிரசாந்த் வீர்: பிரசாந்த் வீர் ஆல்ரவுண்டர் என்றாலும் சென்னை அணி அவருக்குப் பெரிய அளவில் வாய்ப்புகள் கொடுக்கவில்லை. 6 போட்டிகளில் (5 இன்னிங்ஸ்) 90 ரன்கள் அடித்தார். ஒரு போட்டியில் மட்டுமே பந்துவீசினார்.

ராமகிருஷ்ண கோஷ்: வேகப்பந்துவீச்சாளரான கோஷ்க்கு ஒரு போட்டியில் மட்டுமே வாய்ப்பு கிடைத்தது. ஒரு விக்கெட் வீழ்த்தினார். அந்தப் போட்டியில் காயமடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

குர்ஜப்நீட் சிங்: சென்ற ஆண்டே அணியில் இருந்த குர்ஜப்நீட் சிங்கிற்கு இந்த ஆண்டு தான் வாய்ப்பு கிடைத்தது. 8 போட்டிகளில் ஆடி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். எகானமி - 9.25.

கொல்கத்தா:

சப்ரப் துபே : கொல்கத்தா அணியில் இந்த ஆண்டு அறிமுகமான ஒரே இந்திய வீரர் சப்ரப் துபே தான். இடதுகை வேகப்பந்துவீச்சாளரான துபே, 4 போட்டிகளில் ஆடி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சிறந்த பந்துவீச்சு 2/28, எகானமி - 8.25.

<u>தேஜஸ்வி சிங் தாஹிகா:</u> விக்கெட்கீப்பரான தேஜஸ்வி சிங் தாஹிகா 2 போட்டிகளில் ஆடி 12 ரன்கள் அடித்தார்.

<u>பின் ஆலன்:</u> நியூசிலாந்து அணியின் அதிரடி ஆட்டக்காரர் பின் ஆலன் முதல் முறையாக ஐபிஎல் ஆடினார். 11 போட்டிகளில் 349 ரன்கள் அடித்தார். 1 சதம் மற்றும் 1 அரைசதம் அடித்தார்.

<u>பிளசிங் முசாராபானி:</u> ஜிம்பாப்வே அணியின் வேகப்பந்துவீச்சாளர் முசாராபானி, பங்களாதேஷ் வீரர் முஸ்டாபிசூர் ரஹ்மானுக்கு மாற்றுவீரராக வந்தார். 2 போட்டிகளில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சிறந்த பந்துவீச்சு 4/41, எகானமி - 10.71.

டெல்லி :

<u>ஷகீல் பராக்:</u> டெல்லி அணியில் மிடில்ஆர்டர் பேட்டராக அறிமுகமானார் ஷகீல் பராக். 4 போட்டிகளில் ஆடி 46 ரன்கள் அடித்தார்.

<u>அக்யூப் நபி :</u> காஷ்மீர் வேகப்பந்துவீச்சாளர் அக்யூப் நபி டெல்லி அணிக்காக 5 போட்டிகளில் ஆடி விக்கெட் எதுவும் வீழ்த்தவில்லை.

<u>திரிபுராண விஜய்:</u> ஆஃப் ஸ்பின்னரான விஜய் ஒரு போட்டியில் ஆடி விக்கெட் எதுவும் வீழ்த்தவில்லை.

<u>பதும் நிஸங்க:</u> இலங்கை அணியின் துவக்க வீரர் பதும் நிஸங்க டெல்லி அணியின் துவக்கவீரராக 10 போட்டிகளில் ஆடி 278 ரன்கள் அடித்தார். அதிகபட்சம் 62, இரண்டு அரை சதங்கள் அடித்தார்.

பஞ்சாப் :

பஞ்சாப் அணியில் இந்தியப் புதுமுகங்கள் யாரும் இல்லை.

கூப்பர் கொணலி : ஆஸ்திரேலியாவின் கூப்பர் கொணலி 14 போட்டிகளில் ஆடி 491 ரன்கள் குவித்தார். ஒரு சதம் மற்றும் 2 அரை சதங்கள் அடித்தார். பந்துவீசவில்லை.

பென் தார்ஸூயிஸ்: ஆஸ்திரேலியா அணியின் வேகப்பந்துவீச்சாளர் பென் தார்ஸூயிஸ் ஒரு போட்டியில் ஆடி ஒரு விக்கெட் மட்டும் வீழ்த்தினார். எகானமி 12.75

ஹைதராபாத் :

பிரஃபுல் ஹிங்கே : அறிமுகப் போட்டியில் முதல் ஓவரில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய இளம் வேகப்பந்துவீச்சாளர், அதற்குப்பிறகு பெரிய அளவில் எதுவும் செய்யவில்லை. 7 போட்டிகளில் ஆடி 14 விக்கெட்டுகளை வீழ்த்தினார். எகானமி 11.73

ஷகிப் ஹூசைன்: இளம் வேகப்பந்துவீச்சாளர் ஷகிப் ஹூசைன், கேப்டன் கம்மின்ஸிடம் நல்ல பேரை வாங்கினார். 11 போட்டிகளில் ஆடி 15 விக்கெட்டுகளை வீழ்த்தினார், எகானமி 9.45.

ஷிவாங் குமார்: ஷிவாங் ஹைதராபாத் அணியில் ஒற்றை சுழற்பந்துவீச்சாளராக வலம்வந்தார். இடதுகை மணிக்கட்டு சுழற்பந்து வீச்சாளரான ஷிவாங் 13 போட்டிகளில் ஆடி 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார், எகானமி 9.61

ரவிச்சந்திரன் சமரன்: இளம் இடதுகை பேட்டரான சமரன் 6 போட்டிகளில் ஆடி 19 ரன்கள் அடித்தார்.

டேவிட் பெயின்: இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஹைதராபாத் அணியில் இரண்டு போட்டிகளில் ஆடினார். காயம் காரணமாக வெளியேறினார்.

தில்ஷன் மதுஸ்க: இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஒரு போட்டியில் மட்டுமே ஆடினார்.

சலில் அரோரா: விக்கெட்கீப்பர் பேட்டரான சலில் அரோரா 14 போட்டிகளில் ஆடி 156 ரன்கள் அடித்தார். அதிகபட்சம் 35.

ராஜஸ்தான்:

யாஷ்ராஜ் புஞ்சா: ராஜஸ்தான் அணியில் ஆடிய இளம் லெக்ஸ்பின்னர். 8 போட்டிகளில் ஆடி 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார், எகானமி 9.30.

பிரிஜேஸ் சர்மா: சிறப்பாகப் பந்துவீசிய வேகப்பந்துவீச்சாளரான பிரிஜேஸ் 13 போட்டிகளில் ஆடி 14 விக்கெட்டுகளை வீழ்த்தினார், எகானமி - 9.89.

ரவி சிங்: இளம் பேட்டரான ரவி சிங் ஒரு போட்டியில் மட்டுமே ஆடினார்.

சுஷாந்த் மிஸ்ரா: வேகப்பந்துவீச்சாளரான சுஷாந்த் 2 போட்டிகளில் ஆடி 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

குஜராத்:

அசோக் சர்மா : குஜராத் அணியில் வேகப்பந்துவீச்சாளராக அறிமுகம் ஆனார். 6 போட்டிகளில் ஆடி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நிஷாந்த் சிந்து: இடதுகை பேட்டரான நிஷாந்த் சிந்து 8 போட்டிகளில் ஆடி 63 ரன்கள் அடித்தார்.

பெங்களூரு:

அபினந்தன் சிங்: வேகப்பந்துவீச்சாளரான அபினந்தன் சிங் 3 போட்டிகளில் ஆடி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஜேக்கப் டஃப்பி: நியூசிலாந்து அணியின் ஜேக்கப் டஃப்பி பெங்களூரு அணிக்காக ஆடினார். 6 போட்டிகளில் ஆடி 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார், எகானமி 10.95.

மைல் கல்லை எட்டியவர்கள்		
	இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் டங்க் டெஸ்ட் போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50
1000	ஆப்கானிஸ்தான் அணியின் ரஹ்மத் ஷா டெஸ்ட் போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	பங்களாதேஷ் அணியின் நஜ்முல் ஹோசைன் சாண்டோ ஒருநாள் போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	2000
2000	வெஸ்ட் இண்டீஸ் அணியின் துவக்க வீரர் பிரெண்டன் கிங் சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	
	இங்கிலாந்து அணியின் கேப்டன் நாட் ஷிவர் புருண்ட் சர்வதேச டி20 போட்டிகளில் 3000 ரன்களைக் கடந்தார்.	3000

மைல் கல்லை எட்டியவர்கள்		
	இந்திய அணியின் கேப்டன் சுப்மன் கில் ஒருநாள் போட்டிகளில் 3000 ரன்களைக் கடந்தார்.	3000
1000	இந்திய அணியின் இஷான் கிஸன் ஒருநாள் போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	இந்திய அணியின் ஸ்ரேயாஸ் ஐயர் ஒருநாள் போட்டிகளில் 3000 ரன்களைக் கடந்தார்.	3000
2000	ஆப்கானிஸ்தான் அணியின் துவக்க வீரர் ரஹ்மானுல்லா குர்பாஸ் ஒருநாள் போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	
	நெதர்லாந்து அணியின் ஆல் ரவுண்டர் ஐரிஷ் வில்லிங் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார்.	100

மைல் கல்லை எட்டியவர்கள்

	பாகிஸ்தான் அணியின் கேப்டன் பாத்திமா சனா சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50
50	பங்களாதேஷ் அணியின் ரபேயா கான் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	
	நியூசிலாந்து அணியின் கேப்டன் அமெலியா கெர் சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	2000
150	ஆஸ்திரேலியா அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஆடம் ஸாம்பா சர்வதேச டி20 போட்டிகளில் தனது 150வது விக்கெட்டை வீழ்த்தினார்.	
	பங்களாதேஷ் அணியின் சுழற்பந்து வீச்சாளர் நசும் அகமது சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50

மைல் கல்லை எட்டியவர்கள்		
	இங்கிலாந்து அணியின் அலைஸ் கேப்ஸி சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	1000
150	இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷோபா எக்லஸ்டோன் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 150வது விக்கெட்டை வீழ்த்தினார்.	
	நெதர்லாந்து அணியின் ஸ்ட்ரே காலிஸ் சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	2000
14000	இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் டெஸ்ட் போட்டிகளில் 14000 ரன்களைக் கடந்தார்.	
	நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் லே தாகுகு சர்வதேச டி20 போட்டிகளில் தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார்.	100

மைல் கல்லை எட்டியவர்கள்		
	ஸ்காட்லாந்து அணியின் ஜேர்சி கார்ட்டர் சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	1000
1000	பங்களாதேஷ் அணியின் ஷோபனா மோஸ்டரி சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	இங்கிலாந்துக் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் டெஸ்ட் போட்டிகளில் தனது 250வது விக்கெட்டை வீழ்த்தினார்.	250
1000	இந்திய அணியின் ஆல் ரவுண்டர் ஷிவம் துபே சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	ஆஸ்திரேலியக் கேப்டன் ஷோபி மொலினெக்ஸ் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50

மைல் கல்லை எட்டியவர்கள்

	தென்னாப்பிரிக்கா அணியின் ஆல் ரவுண்டர் மரிஸான் காப் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார்.	100
300	வெஸ்ட் இண்டீஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் கீமர் ரோச் டெஸ்ட் போட்டிகளில் தனது 300வது விக்கெட்டை வீழ்த்தினார்.	
	தென்னாப்பிரிக்கா அணியின் டாஸ்மின் பிரிட்ஸ் சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	2000

துளிகள்

	கால்பந்து உலகக் கோப்பையில் ஆடும் தமிழர் பிரபலமான அதே வேளையில் கிரிக்கெட்டில் பிரபலமானார் ஒரு தமிழர். இலங்கை ஏ அணியில் இந்தியா ஏ அணிக்கு எதிரான சிறப்பாக பந்து வீசிய குகதாஸ் மதுலன் தான் அவர். அவர் சிறப்பாக வீசியதால் போட்டி டை ஆனது. 19 வயதான குகதாஸ் மதுலன் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தமிழர். விரைவில் குகதாஸ் இலங்கை அணிக்காக ஆடுவார் என முன்னாள் வீரர் லசித் மலிங்கா தெரிவித்துள்ளார்.

அழகு மசாலா

An Initiative of a Group of Woman

fssai
22424031000208

Home Made PRODUCT

NO
Artificial flavors
Preservatives
Added colors

விலைப்பட்டியல்

(1 கிலோ)	MRP	புதிய விலை
மஞ்சள் தூள்	ரூ.400	ரூ.300
தனி மிளகாய் தூள்	ரூ.500	ரூ.350
மல்லி தூள்	ரூ.350	ரூ.250
குழம்பு மிளகாய் தூள்	ரூ.400	ரூ.320
ரசப்பொடி	ரூ.700	ரூ.550
சாம்பார் பொடி	ரூ.440	ரூ.350
பிரியாணி மசாலா	ரூ.850	ரூ.700
கரம் மசாலா	ரூ.750	ரூ.600

For Orders
888 30 29 301
Taste Made for you!

அனைத்து மசாலாக்களும் 50 கிராம் முதல் 1 கிலோ பேக்குகள் வரை கிடைக்கும்.

Page : 01

அழகு
மசாலா
An Initiative of a Group of Woman
fssai
22424031000208
Home Made
PRODUCT
NO
Artificial flavors
Preservatives
Added colors
விலைப்பட்டியல்
(இட்லி பொடி வகைகள்)
(1 கிலோ) MRP புதிய விலை
இட்லி பொடி ரூ.350 ரூ.300
சென்னாகுன்னி பொடி ரூ.800 ரூ.600
கருவேப்பிலை பொடி ரூ.550 ரூ.450
Rice Mix
பருப்பு சாதம் பொடி ரூ.600 ரூ.400
For Orders
888 30 29 301
Taste Made for you!
அனைத்து மசாலாக்களும் 50 கிராம் முதல் 1 கிலோ பேக்குகள் வரை கிடைக்கும்.
Page : 02

<u>மத்தியப் பிரதேச பிரீமியர் லீக்</u>

மத்தியப் பிரதேச பிரீமியர் லீக் ஜூன் 3 முதல் ஜூன் 26 வரை நடைபெற்றது. அனைத்துப் போட்டிகளும் இந்தூர் ஹோல்கர் மைதானத்தில் நடைபெற்றன.

உஜ்ஜைன் பால்கன்ஸ், குவாலியர் சீட்டாஸ், மால்வா ஸ்டாலியன்ஸ், சம்பல் ஹரியால்ஸ், போபால் லியோபேட்ஸ், இந்தூர் பிங்க் பேந்தர்ஸ், புந்தல்கண்ட் புல்ஸ், ரேவா ஜாகுவார்ஸ், ஜபல்பூர் ராயல் லயன்ஸ், ராயல் நிமர் ஈகிள்ஸ் என 10 அணிகள் பங்கேற்றன.

மொத்தம் 45 லீக் போட்டிகள், அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி எனத் தொடர் நடைபெற்றது. புந்தல்கண்ட் புல்ஸ் மற்றும் மால்வா ஸ்டாலியன்ஸ் அணிகள் இரண்டு போட்டியில் மட்டுமே வென்றன. சம்பல் ஹரியால்ஸ் அணி 9ல் எட்டு போட்டிகளில் வென்றது. ஒரு போட்டி மழையால் நடைபெறவில்லை.

ஜூன் 25ல் நடைபெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் ரேவா ஜாகுவார்ஸ் மற்றும் ராயல் நிமர் ஈகிள்ஸ் அணிகள் மோதின. 7.2 ஓவர்கள் முடிந்த நிலையில் மழை குறுக்கிட, ராயல் நிமர் ஈகிள்ஸ் அணி புள்ளிப்பட்டியல் அடிப்படையில் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

<u>அரையிறுதி 2, ஜூன் 25</u>

சம்பல் ஹரியால்ஸ் - 213/8

ஹர்ஷ் தீக்சித் - 48

பங்கஜ் படேல் - 3/53

ஜபல்பூர் ராயல் லயன்ஸ் - 202/8

ஆர்யன் திவாரி - 51

மயூர் படேல் - 2/30

சம்பல் ஹரியால்ஸ் 11 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - அமன் பதோரியா - 30 & 1/22

இறுதிப் போட்டி, ஜூன் 26

சம்பல் ஹரியால்ஸ் - 224/5

சுபம் சர்மா - 57

பருஷ் மண்டல் - 1/36

ராயல் நிமர் ஈகிள்ஸ் - 193/7

அபிஷேக் மவி - 73*

மயூர் படேல் - 2/21

சம்பல் ஹரியால்ஸ் 31 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது

ஆட்டநாயகன் - திரிபுரேஷ் சிங் - 43* & 1/39

தொடர் நாயகன் - திரிபுரேஷ் சிங் - 210 ரன்கள் & 16 விக்கெட்டுகள்.

****

உலகக்கோப்பை 2026

இங்கிலாந்து - இலங்கை:

டன்னி வாட் சதம்

இங்கிலாந்தின் பிள்ளையார் சுழி.

அயர்லாந்து - ஸ்காட்லாந்து:

கேத்ரின் - சாரா சகோதரிகளின் அசத்தல்

முதல் உலகக்கோப்பை வெற்றியை ருசித்த ஸ்காட்லாந்து.

ஆஸ்திரேலியா - தென்னாப்பிரிக்கா:

லிட்ச்பீல்டின் அரைசதம்

வேர்ஹம்மின் சுழல் ஜாலம்

தென்னாப்பிரிக்காவை வீழ்த்தியது.

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ்:

ஆலியா அலைன்னே

பந்துவீச்சால் தாக்க

ஷீமைன் கேம்ப்பெல்

பேட்டால் தாக்க

இலக்கை எட்டியது வெஸ்ட் இண்டீஸ்.

பங்களாதேஷ் - நெதர்லாந்து:

நெதர்லாந்து கேப்டன்

டீ வீடே போராடி அரைசதம் அடிக்க

பங்களாதேஷ் துவக்க வீராங்கனை

ஜூரேய்யா அதிரடியாக அரைசதம் அடித்து முடித்துவைத்தார்.

இந்தியா - பாகிஸ்தான்:

மந்தனாவின் அரைசதம் ஒருபக்கம்

தீப்தி & ஸ்ரீ சரணி சுழல் இன்னொரு பக்கம்

தாக்க இந்தியாவிற்கு

இரண்டு புள்ளிகள்.

நியூஸிலாந்து - இலங்கை:

நிலைத்து நின்று ஆடிய

நிலக்ஷிகாவின் அரைசதம்

நியூசிலாந்தின் வெற்றியைத்

தவிடுபொடியாக்கியது.

இங்கிலாந்து - அயர்லாந்து:

பேட்டிங்கில் சொதப்பிய

அயர்லாந்து பந்துவீச்சில்

இங்கிலாந்து வெற்றியை

18வது ஓவருக்குத் தள்ளியது.

ஆஸ்திரேலியா - பங்களாதேஷ்:

பங்களாதேஷை

இரட்டை இலக்கத்தில் சுருட்டி

ஒற்றை விக்கெட் மட்டுமே விட்டு

மற்றொரு வெற்றியைப்

பதிவுசெய்தது ஆஸ்திரேலியா.

இந்தியா - நெதர்லாந்து:

துவக்கம் சரியாக அமைய

200ஐத் தொட்டது இந்தியா

ஸ்ரீசரணி மீண்டும் சுழல விட

இன்னொரு வெற்றி

இந்தியாவுக்கு.

பாகிஸ்தான் – தென்னாப்பிரிக்கா:

பேட்டிங் பந்துவீச்சு

இரண்டிலும் பாகிஸ்தான்

கேப்டன் சனா ஜொலிக்க

மற்றவர்கள் சொதப்ப

தென்னாப்பிரிக்காவுக்குக் கிடைத்தது சன்மானம்.

ஸ்காட்லாந்து - வெஸ்ட் இண்டீஸ்:

வெஸ்ட் இண்டீஸ் பெரிய இலக்கை

வைக்கவில்லை

ஆனாலும் அருகில்

வந்து தோற்றது

ஸ்காட்லாந்து.

அயர்லாந்து - நியூஸிலாந்து:

அரைசதம் அடித்த

ஓர்லாவும் கேபியும்

அடுத்தடுத்து அவுட்டாக

அயர்லாந்து அருகில்

வந்து தோற்றுப் போனது.

ஆஸ்திரேலியா - நெதர்லாந்து:

ஆஸ்திரேலியா வலிமையைக் காட்டியது

அதை நெருங்கும் துணிவு

நெதர்லாந்துக்கு இல்லை.

பங்களாதேஷ் - பாகிஸ்தான்:

நாஹிதா & சஞ்சிதா

பந்துவீச்சில் கலக்க

சிறிய இலக்கை நெருங்க முடியாமல்

நொறுங்கிப் போனது பாகிஸ்தான்.

இங்கிலாந்து - ஸ்காட்லாந்து:

டங்கிலியின் அரைசதம்

இங்கிலாந்து 200ஐ எட்ட

உதவியது

ஸ்காட்லாந்து போராடி

எடுத்தது 162 மட்டுமே.

இலங்கை - வெஸ்ட் இண்டீஸ்:

இலங்கை எட்டிய

தொண்ணூற்டெட்டை

5 விக்கெட்டுகளை இழந்து

எட்டியது வெஸ்ட் இண்டீஸ்.

இந்தியா - தென்னாப்பிரிக்கா:

இந்தியா ஏனோ தானோ

என ஆடி சுமாரான

இலக்கு வைக்க

மரிஸான் காப் வெறித்தனமாக ஆடி

வெற்றியைப் பெற்றுத் தந்தார்.

நியூஸிலாந்து - ஸ்காட்லாந்து:

டேர்ஸி கார்டர் அரைசதம் அடித்து

வைத்த இலக்கை

இஸ்ஸி ஷார்ப்

அரைசதம் அடித்து

முடித்து வைத்தார்.

அயர்லாந்து - இலங்கை:

தனி மனித ராணுவம்

சமாரியின் சதத்தால்

இலங்கை 9 விக்கெட்டுகள்

வித்தியாசத்தில் வென்றது.

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான்:

பாகிஸ்தான் பந்துவீச்சு

ஆஸ்திரேலியாவை 200ஐத்

தொடவிடவில்லை.

ஆஸ்திரேலியா பந்துவீச்சு

பாகிஸ்தானை

90ஐத் தொடவிடவில்லை.

இங்கிலாந்து - வெஸ்ட் இண்டீஸ்:

டேன்னி வாட் அரைசதம் மூலம்

வைத்த இலக்கை

வெஸ்ட் இண்டீஸ் துரத்தியது.

ஆனால் தொடவில்லை.

பங்களாதேஷ் - இந்தியா:

சிறிய இலக்கைத் துரத்திய இந்தியா

ஷபாலியின் வீழ்ச்சிக்குப்

பிறகு திணறி

ஒருவழியாக வாகை சூடியது.

நெதர்லாந்து - தென்னாப்பிரிக்கா:

நெதர்லாந்தை

நொறுக்கியது

டாஸ்மின் பிரிட்ஸ் சதம்.

ஸ்காட்லாந்து - இலங்கை:

கடைசிக்கு முந்திய

பந்தில் வென்று

அரையிறுதி வாய்ப்புக்கு

ஏங்கியது இலங்கை.

நெதர்லாந்து - பாகிஸ்தான்:

குறைவான ரன்கள்

அடித்தாலும் வெற்றியோடு

வெளியேறியது பாகிஸ்தான்.

அயர்லாந்து - வெஸ்ட் இண்டீஸ்:

ஓர்லாவின் அரைசதம்

முதல் உலகக் கோப்பை

வெற்றியை அயர்லாந்துக்குத் தந்தது.

இங்கிலாந்து - நியூசிலாந்து:

நியூசிலாந்தின் கட்டாய வெற்றிப் போட்டியில்

கட்டையைக் கொடுத்தது

டன்னி வாட் அரைசதம்.

பங்களாதேஷ் - தென்னாப்பிரிக்கா:

சிறிய இலக்கை

கடைசி ஓவரில்

எட்டியது தென்னாப்பிரிக்கா,

அரையிறுதி வாய்ப்பையும்.

ஆஸ்திரேலியா- இந்தியா:

இந்தியக் கேப்டனின்

அரைசதம்

எதிரணியின் பெர்ரி,

கார்ட்னர் அரைசதங்களால்

வீணாய்ப் போனது.

கிரிக்கெட் சர்ச்சை

முத்தையா முரளிதரன் பந்தை எறிவதாக எழுந்த சர்ச்சை.

முரளிதரன் பந்தை எறிவதாக 1996ல் குற்றச்சாட்டு எழுந்தது. அதனைத் தொடர்ந்து முரளிதரன் ஐசிசியின் அறிவுரைப்படி தேவையான சோதனை மேற்கொண்டு பந்தை எறியவில்லை என்று நிரூபித்தார்.

1999ல் இலங்கை அணி ஆஸ்திரேலியாவில் முத்தரப்பு ஒருநாள் தொடரில் ஆடியது. ஜனவரி 23ல் அடிலெய்டு மைதானத்தில் இங்கிலாந்து அணியுடன் மோதியது. இங்கிலாந்து அணி முதலில் பேட்டிங் செய்தது.

முரளிதரன் 16வது ஓவரை வீசி ஒரு ரன் மட்டும் கொடுத்தார். 18வது ஓவரின் 4வது பந்தை வீசியபோது, ஸ்கொயர் லெக்கில் நின்ற அம்பயர் ராஸ் எமர்சன், நோபால் என்று அறிவித்ததோடு முரளிதரன் எறிகிறார் என்றார். இந்நிலையில் இலங்கை கேப்டன் ரணதுங்க அம்பயரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதோடு இங்கிலாந்து பேட்டர்களிடமும் விளக்கம் கொடுத்தார். பேச்சுவார்த்தை நீண்டுகொண்டே இருந்தது. அதேசமயம் இலங்கை வீரர்கள் யாரும் விவாதத்தில் பங்கேற்கவில்லை. இலங்கை அணியின் மேனேஜர் ரஞ்சித் பெர்ணான்டோ மற்றும் போட்டி நடுவர் பீட்டர் வாண்டர் மெர்வி ஆகியோர் மைதானத்திற்கு சென்றனர்.

ரணதுங்க போட்டியைத் தொடரமாட்டோம் என்று உறுதியாக நின்றார். இலங்கை வீரர்கள் வெளியேறாமல் எல்லைக்கோட்டருகே நின்றனர்.

ஒளிபரப்பு வர்ணனையில் இருந்த இயான் போத்தம் நடுவர் வாண்டர் மெர்வி நேர்மையானவர் நல்ல முடிவை எடுப்பார் என்று வர்ணனையில் கூறினார்.

போன் கொண்டுவரப்பட்டது. ரஞ்சித் பெர்ணான்டோ மற்றும் அரவிந்த டி சில்வா இலங்கை கிரிக்கெட் வாரியத்திடம் பேசினர். ஒருவழியாக போட்டி மீண்டும் தொடங்கியது. முரளிதரன் லெக் ஸ்பின் மட்டும் வீசுவாரா என்று எதிர்பார்க்கப்பட்டது. முரளி ஆஃப் ஸ்பின் பந்துகளை வீசினார். நோபால் கொடுக்கப்படவில்லை. 18வது ஓவரை முடித்த முரளிக்கு, 20வது ஓவர் கொடுக்கப்படவில்லை.

21வது ஓவரை வீசினார் முரளிதரன். இப்போது ராஸ் எமர்சன் பந்துவீச்சு முனை அம்பயர். முரளியின் கால்களைப் பார்த்தாரே தவிர கைகளைப் பார்க்கவில்லை. ஆனால் முரளிதரன் அம்பயருக்கு குறுக்கே ஓடி அரவுண்ட் த விக்கெட் பந்து வீசும்போது ஸ்டம்ப் அருகில் வந்து நின்றார் ராஸ். இதனால் முரளிக்கு அசௌகரியம் ஏற்பட்டது. முரளிதரன் மற்றும் ரணதுங்க ஒரு கோடு வரைந்து அதில் நிற்கச் சொன்னாலும் நிற்காமல் அடம் பிடித்தார் ராஸ் எமர்சன். ஜெயசூர்ய பந்துவீசும்போதும் அதையே செய்தார் ராஸ் எமர்சன்.

302 ரன்களை சேஸ் செய்த இலங்கை அணி அந்தப் போட்டியில் வென்றது. வெற்றிக்கான ரன்னை அடித்தது யார் தெரியுமா? முத்தையா முரளிதரன்.

****

ஜார்கண்ட் டி20 தொடர்

ஜார்கண்ட் மாநிலக் கிரிக்கெட் வாரியம் சார்பாக நடத்தப்பட்ட டி20 தொடர் ஜூன் 10 முதல் ஜூன் 23 வரை நடைபெற்றது. அனைத்துப் போட்டிகளும் ராஞ்சி மைதானத்தில் நடைபெற்றன. பிரபல வீரர்கள் குமார் குஷாக்ரா, ராபின் மின்ஸ் ஆகியோர் பங்கேற்றனர். சர்வதேசப் போட்டிகளில் ஆடியதால் இஷான் கிஸன் பங்கேற்கவில்லை.

ராஞ்சி டைட்டன்ஸ், சோட்டா நாக்பூர் ராயல்ஸ், கொய்லாஞ்சுல் சூப்பர் கிங்ஸ், ஜாம்ஷெட்பூர் ஸ்டீலர்ஸ், தன்பத் டைமண்ட்ஸ், சந்தால் ஸ்ட்ரைக்கர்ஸ் என ஆறு அணிகள் பங்கேற்றன. இதில் தன்பத் டைமண்ட்ஸ் அணி ஒரு போட்டியில் மட்டுமே வென்றது.

<u>அரையிறுதி 1, ஜூன் 22</u>

ஜாம்ஷெட்பூர் ஸ்டீலர்ஸ் - 250/2

குமார் கரண் - 143

ஹர்ஷ் ராஜ் - 1/41

கொய்லாஞ்சுல் சூப்பர் கிங்ஸ் - 171

உத்ஹர்ஷ் சிங் - 101

முகமது கௌனெயின் குரேஷி - 3/31

ஜாம்ஷெட்பூர் ஸ்டீலர்ஸ் 79 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - குமார் கரண் - 143

<u>அரையிறுதி 2, ஜூன் 22</u>

ராஞ்சி டைட்டன்ஸ் - 220/8

ஷிரேஸ்தா - 62

விகாஸ் சிங் - 3/54

சோட்டா நாக்பூர் ராயல்ஸ் - 221/3

விராட் சிங் - 77

சப்ரப் ஷேகர் - 2/47

சோட்டா நாக்பூர் ராயல்ஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - விராட் சிங் - 77

<u>இறுதிப் போட்டி, ஜூன் 23</u>

ஜாம்ஷெட்பூர் ஸ்டீலர்ஸ் - 180/8

ஹர்ஷ் ராணா - 64

துர்க்கேஷ் குமார் - 1/15

சோட்டா நாக்பூர் ராயல்ஸ் - 184/3

குமார் குஷாக்ரா - 78*

அமன் குமார் - 2/24

சோட்டா நாக்பூர் ராயல்ஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - குமார் குஷாக்ரா - 78*

தொடர் நாயகன் - விராட் சிங் - 395 ரன்கள்.

டெஸ்ட் சாம்பியன்ஷிப் (2025-2027) புள்ளிப் பட்டியல்							
இடம்	அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	டிரா	புள்ளி	%
1	ஆஸ்திரேலியா	8	7	1	0	84	87.50
2	தென் ஆப்பிரிக்கா	4	3	1	0	36	75.00
3	நியூஸிலாந்து	6	4	1	1	52	72.22
4	பங்களாதேஷ்	4	2	1	1	28	58.33
5	இந்தியா	9	4	4	1	52	48.15
6	இலங்கை	3	1	1	1	16	44.44
7	இங்கிலாந்து	13	4	8	1	38	24.36
8	வெஸ்ட் இண்டீஸ்	9	1	7	1	16	14.81
9	பாகிஸ்தான்	4	1	3	0	4	8.33

**இந்தியாவுடனான போட்டியில் பந்து வீச அதிக நேரம் எடுத்ததால் இங்கிலாந்து அணி இரண்டு புள்ளிகளை இழந்தது.

**பங்களாதேஷ் உடனான போட்டியில் பந்து வீச அதிக நேரம் எடுத்ததால் பாகிஸ்தான் அணி 8 புள்ளிகளை இழந்தது.

துடுப்பாட்டம்

இம்பாக்ட் ப்ளேயர்

இந்திய அணியில் ஒரே ஒரு ஆண்டு மட்டும் விளையாடிய வேகப்பந்துவீச்சாளர் அபே குருவில்லா பற்றித் தெரியுமா?

அபே குருவில்லா, கேரள மாநிலம் ஆலப்புழாவில் பிறந்தவர். அவரது குடும்பம் மும்பையின் செம்பூர் பகுதிக்கு இடம்பெயர்ந்தது.

6 அடி 5 அங்குலம் உயரம் கொண்ட அபே குருவில்லா, பிராங்க் டைசனின் மஃபட்லால் வேகப்பந்துவீச்சு திட்டத்தில் சேர்ந்தார். மும்பை அணிக்காக ரஞ்சிப் போட்டிகளில் ஆடினார். 1991-92ல் ரஞ்சித் தொடரில் 35 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதனால் இந்திய அணிக்கு தேர்வாகுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்திய அணியில் அப்போது தேர்வாகவில்லை. ஆள் உயரமாக இருந்தாலும் குருவில்லாவிடம் பெரிய அளவில் வேகம் இல்லை. ஆனால் பந்தை ஸ்விங் செய்யக்கூடியவர்.

1997ம் ஆண்டு ஸ்ரீநாத்துக்கு காயம் ஏற்பட்டதால் அபே குருவில்லாவுக்கு இந்திய அணியில் வாய்ப்பு கிடைத்தது. வெஸ்ட் இண்டீஸ் தொடரில் அறிமுகம் ஆனார். 3வது டெஸ்டில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆனால் பேட்டிங் சொதப்பலால் இந்திய அணி தோற்றது.

1997ம் ஆண்டில் 10 டெஸ்ட் மற்றும் 25 ஒருநாள் போட்டிகளில் ஆடினார். இரண்டிலும் தலா 25 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதற்குப் பிறகு அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதுபற்றி அவரிடம் கேட்டதற்கு "எனக்காவது இந்திய அணியில் கிடைத்தது. இங்கே நிறைய பேருக்கு இந்திய அணி வாய்ப்பு கனவாகவே உள்ளது" என்றார்.

28வது வயதில் இந்திய அணியில் வாய்ப்புப் பெற்ற குருவில்லா, தனது 31வது வயதில் 2000ல் ஓய்வு அறிவித்தார். அதற்குப்பிறகு பயிற்சியாளராகப் பணியாற்றினார். மும்பை அணியின் தேர்வாளராக இருந்தார். பிசிசிஐயில் மேலாளராகவும் இருந்துள்ளார்.

ஐபிஎல் தொடரில் மும்பை மற்றும் ராஜஸ்தான் அணிகளோடு பணியாற்றினார். பிரவீன் தாம்பே ராஜஸ்தான் அணியில் இடம்பெறக் காரணம் அபே குருவில்லா தான்.

கேரளத்தில் பிறந்ததால் மலையாளிகளால் கொண்டாடப்பட்ட குருவில்லா, நன்றாக ஆடியும் ஒரே ஒரு ஆண்டு தான் அணியில் இருந்தார் என்பது நிச்சயம் அரசியல் என்பதை உணர்த்துகிறது.

****

சாம்பியனைச் சாய்த்த அயர்லாந்து அடுத்த இதழில்....

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா

- ✓ ஆஸ்திரேலியா அணி, பாகிஸ்தான் சென்று 3 ஒருநாள் போட்டிகளில் ஆடியது. நிறைய ஆஸ்திரேலியா வீரர்கள் ஐபிஎல் தொடரில் இருந்ததால் ஜோஷ் இங்லிஷ் தலைமையில் ஆஸ்திரேலிய அணி சென்றது.
- ✓ முதல் போட்டி ராவல்பிண்டியிலும், அடுத்த இரண்டு போட்டிகள் லாகூரிலும் நடைபெற்றன. வெயில் காரணமாக போட்டிகள் 4.30 மணிக்குத் தொடங்கின.
- ✓ முதல் போட்டியில் பாகிஸ்தான் அணியில் அராபத் மின்கஸ், ஆஸ்திரேலிய அணியில் ஆலிவர் பேக் அறிமுகமானார்கள்.
- ✓ முதல் போட்டி பாகிஸ்தான் ஆடிய 1000வது ஒருநாள் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.
- ✓ ஆஸ்திரேலியா அணியின் பில்லி ஸ்டான்லேக் 7 ஆண்டுகளுக்குப் பிறகு ஒருநாள் போட்டியில் ஆடினார்.
- ✓ பாகிஸ்தான் அணியின் அராபத் மின்கஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அறிமுகப் போட்டியில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் பாகிஸ்தான் வீரர் அராபத் மின்கஸ்.



- ✓ பாகிஸ்தான் 4 சுழற்பந்துவீச்சாளர்களைப் (அப்ரார், அராபத் மின்கஸ், சதாப் & சல்மான் அகா) பயன்படுத்தியது. ஆஸ்திரேலியா 5

சுழற்பந்துவீச்சாளர்களைப் (குன்னிமேன், சங்கா, ஷார்ட், ரென்ஷா, லபுசேன்) பயன்படுத்தியது.

- ✓ முதல் போட்டியில் பாகிஸ்தான் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.
- ✓ முதல் போட்டியில் பாகிஸ்தான் தரப்பில் அராபத் மின்கஸ் 1 மெய்டன் வீசினார். ஆஸ்திரேலியா தரப்பில் குன்னிமேன் 1, சங்கா 3 மெய்டன் ஓவர்களை வீசினர்.
- ✓ மேத்யூ ஷார்ட் தனது 4வது ஒருநாள் போட்டி அரைசதத்தை (55) அடித்தார். ரென்ஷா தனது 2வது அரைசதத்தை (61) அடித்தார். பாகிஸ்தான் தரப்பில் பாபர் அசாம் தனது 38வது அரைசதத்தையும் (69), ஹாஸி ஹோரி தனது முதல் அரைசதத்தையும் (65) அடித்தனர்.
- ✓ 2வது போட்டியில் ஆஸ்திரேலியா 41 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.
- ✓ ஜோஷ் இங்லிஷ் தனது 5வது அரைசதத்தை (51) அடித்தார். கேமரூன் க்ரீன் தனது 3வது அரைசதத்தை (53) அடித்தார். பாகிஸ்தான் அணியில் சதாப் கான் தனது 5வது அரைசதத்தை (71) அடித்தார்.

- ✓ பாகிஸ்தான் அணியின் ஷாகின் அப்ரிடி மற்றும் ஆஸ்திரேலியா அணியின் மேத்யூ ஷார்ட் 36 ரன்கள் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.
- ✓ ஆஸ்திரேலியா அணியில் ஒரே ஒரு வேகப்பந்துவீச்சாளர் (நாதன் எல்லிஸ்) மட்டுமே இருந்தார். கேமரூன் க்ரீன் 2வது வேகப்பந்துவீச்சாளராக செயல்பட்டார். நாதன் எல்லிஸ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி, ஆட்டநாயகன் ஆனார்.
- ✓ 3வது போட்டியில் பாகிஸ்தான் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.
- ✓ ஜோஷ் இங்லிஷ் தனது 6வது அரைசதத்தை (65) அடித்தார். ஆனாலும் ஆஸ்திரேலியா 157 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.
- ✓ குங்னிமேன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பாகிஸ்தான் கேப்டன் 30 ரன்கள் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டநாயகன் ஆனார்.
- ✓ **தொடர் நாயகன் அராபத் மின்கஸ் – 60 ரன்கள் & 7 விக்கெட்டுகள்**

SATHYA SAI COMMUNICATION
MOBILE SHOP
TIRUANNMALLAI
OUR SPECIALITIES
New & Used Mobiles
All kind Mobile Service
Original Displays & Spares
OFFICIAL SISKO BRAND DEALER
#Fast Chargers
#Powerbank
SISKO
Technology you deserve
#Neckbands
#Airbuds
CUSTOMISED & GIFT ITEMS
#Photo case
#Mug, Pillow & Gift Items
#Photo Frame
SPECIAL OFFER
For Corporate/Office/College/School
Gifts bulk purchase - BEST PRICE
Delivery all over tamilnadu Available
Contact Us: : 9841754302

பெங்கால் புரோ டி20

பெங்கால் புரோ டி20 ஜூன் 5 முதல் ஜூன் 25 வரை கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

அடமாஸ் ஹௌரா வாரியர்ஸ், நோவுஸ் புருலியா ராயல்ஸ், முர்சிதாபாத் கிங்ஸ், ஸோபிஸ்கோ ஸ்மாஸர்ஸ் மல்டா, ஸ்ரச்சி ரார் டைகர்ஸ், செர்வோடெக் சிலிகுறி ஸ்ட்ரைக்கர்ஸ், ரஷ்மி மெகிதினிபூர் விஷார்ட்ஸ், கொல்கத்தா ராயல் டைகர்ஸ் என எட்டு அணிகள் பங்கேற்றன.

<u>முதல் அரையிறுதி, ஜூன் 20</u>

நோவுஸ் புருலியா ராயல்ஸ் - 107

லோகேஷ் கெயிட் - 48

ரோகித் குமார் - 4/24

ஸ்ரச்சி ரார் டைகர்ஸ் - 110/3

சுமந்தா குப்தா - 47*

லோகேஷ் கெயிட் - 1/3

ஸ்ரச்சி ரார் டைகர்ஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

<u>2ம் அரையிறுதி, ஜூன் 20</u>

ஸோபிஸ்கோ ஸ்மாஸர்ஸ் மல்டா - 134

விரிடம் போரல் - 49

இஷான் போரல் - 4/32

செர்வோடெக் சிலிகுறி ஸ்ட்ரைக்கர்ஸ் - 123/9

விஷால் பாட்டி - 33

சுராஜ் சிந்து ஜெய்ஸ்வால் - 3/30

ஸோபிஸ்கோ ஸ்மாஸர்ஸ் மல்டா 11 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

<u>இறுதிப்போட்டி, ஜூன் 21</u>

ஸ்ரச்சி ரார் டைகர்ஸ் - 165/4 (15)

ஷாபாஸ் அகமது - 88*

அகில் - 2/4

ஸோபிஸ்கோ ஸ்மாஸர்ஸ் மல்டா - 97/5 (9)

அபிமன்யு ஈஸ்வரன் - 38

சுக்மீட் சிங் - 2/14

ஸ்ரச்சி ரார் டைகர்ஸ் 9 ரன்கள் (டிஎல்எஸ்) வித்தியாசத்தில் வென்றது.

****

மகளிர் பெங்கால் புரோ 20 தொடரில் அடமாஸ் ஹௌரா வாரியர்ஸ் அணி பட்டம் வென்றது.

மூவேந்தர்கள்

மூவேந்தர்கள் பகுதியில் இந்த மாதம் கர்ரன் சகோதரர்கள்.

சாம் கர்ரன் :

இடதுகை பேட்டர், இடதுகை வேகப்பந்துவீச்சாளருமான சாம் கர்ரன் தான் கடைசி சகோதரர். ஜிம்பாப்வேவில் பிறந்த இவர் 2012ல் இங்கிலாந்தில் குடியேறினார்.

ஜிம்பாப்வேவில் 13 வயதுக்கு உட்பட்டோர் போட்டியில் ஆடிய சாம் கர்ரன், இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்டோர் போட்டியில் ஆடினார். 2018ல் சர்வதேசப் போட்டிகளில் ஆடிய சாம் கர்ரன், சர்வதேச டி20 போட்டிகளில் ஹாட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்திய 2வது இங்கிலாந்து வீரர்.

2022 உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார் சாம் கர்ரன். சாம் கர்ரன் 24 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 815 ரன்களும், 47 விக்கெட்டுகளையும் எடுத்துள்ளார். 41 ஒருநாள் போட்டிகளில் ஆடி 642 ரன்களும் 37 விக்கெட்டுகளையும் எடுத்துள்ளார். 75 சர்வதேச டி20 போட்டிகளில் ஆடி 696 ரன்களும் 66 விக்கெட்டுகளையும் எடுத்துள்ளார்.

டாம் கர்ரன்:

டாம் கர்ரன், இந்த சகோதரர்களில் மூத்தவர். வலதுகை பேட்டர், வலதுகை வேகப்பந்துவீச்சாளர்.

இவர் தென்னாப்பிரிக்காவில் பிறந்தவர். இவருக்கு தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, ஜிம்பாப்வே அணிகளில் ஆட வாய்ப்பு கிடைத்தது. டாம் கர்ரன் இங்கிலாந்து அணியைத் தேர்வுசெய்தார். 2019 உலகக்கோப்பை அணியில் டாம் கர்ரன் இடம்பெற்றார். ஆனால் ஒரு போட்டியில் கூட ஆடவில்லை. 2021

டி20 உலகக்கோப்பை அணியோடு அடுத்தநிலை வீரராக சென்றார். தம்பி சாம் கர்ரன் காயத்தால் அணியில் இடம்பெற்றார்.

டாம் கர்ரன் 2 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 66 ரன்களும், 2 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார். 28 ஒருநாள் போட்டிகளில் ஆடி 303 ரன்களும், 34 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார். 30 சர்வதேச டி20 போட்டிகளில் ஆடி 64 ரன்களும், 29 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார்.

பென் கர்ரன்:

இரண்டாவது சகோதரரான பென் கர்ரன் தந்தை வழியில் ஜிம்பாப்வே அணிக்காக ஆடிவருகிறார்.

பென் கர்ரன் 8 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 495 ரன்களும், 8 ஒருநாள் போட்டிகளில் ஆடி 340 ரன்களும் அடித்துள்ளார்.

****

துளிகள்

உலகக்கோப்பைக்குத் தேர்வான இளம் சுழற்பந்துவீச்சாளர் ஸ்ரேயங்கா பாட்டில். இவர் 19 பந்துகள் மட்டுமே வீசிய நிலையில் காயமடைந்து அணியில் இருந்து வெளியேறினார். நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் ஒரே ஒரு பந்து தான் வீசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

முத்தரப்பு டி20 தொடர், ஜூன் 1, டப்லின்

வெஸ்ட் இண்டீஸ் - 141/8	**அயர்லாந்து - 99/5**

அயர்லாந்து 1 ரன்# வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஒர்லா பிரெண்டெர்காஸ்ட் - 2/26 & 71*

முத்தரப்பு டி20 தொடர், ஜூன் 2, எடின்பர்க்

பங்களாதேஷ் - 152/6	**ஸ்காட்லாந்து - 118**

பங்களாதேஷ் 34 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - நிகர் சுல்தானா - 58

இங்கிலாந்து - இந்தியா 3வது டி20, ஜூன் 2, டவுன்டன்

இந்தியா - 180/5	**இங்கிலாந்து - 184/4**

இங்கிலாந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - அலைஸ் கேப்ஸி - 82

முத்தரப்பு டி20 தொடர், ஜூன் 3, எடின்பர்க்

ஸ்காட்லாந்து - 124/3	**நெதர்லாந்து - 80/6**

ஸ்காட்லாந்து 24 ரன்கள்# வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - கேத்ரின் ப்ருஸ் - 63, 1/16 & 2 கேட்ச்கள்

முத்தரப்பு டி20 தொடர், ஜூன் 3, டப்லின்

பாகிஸ்தான் - 111/7	**வெஸ்ட் இண்டீஸ் -**

முடிவு இல்லை

முத்தரப்பு டி20 தொடர், ஜூன் 4, எடின்பர்க்

பங்களாதேஷ் - 98/3	**நெதர்லாந்து - 85/5**

பங்களாதேஷ் 13 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - டிலாரா அஃதெர் - 51

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 12, பிர்மிங்கம்

இங்கிலாந்து - 219/1	**இலங்கை - 132**

இங்கிலாந்து 87 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - டன்னி வாட் ஹோட்ஜ் -105*

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 13, மான்செஸ்டர்

ஸ்காட்லாந்து - 161/5	**அயர்லாந்து - 121**

ஸ்காட்லாந்து 40 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - கேத்ரின் ப்ருஸ் - 66 & 2/19

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 13, மான்செஸ்டர்

ஆஸ்திரேலியா - 172/8	**தென் ஆப்பிரிக்கா - 107**

ஆஸ்திரேலியா 65 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஜார்ஜியா வார்ஹம் - 32 & 3/13

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 13, சௌதம்ப்டன்

நியூஸிலாந்து - 162/6	**வெஸ்ட் இண்டீஸ் - 163/3**

வெஸ்ட் இண்டீஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஸ்கெமைனே கேம்பெல் - 90*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 14, பிர்மிங்கம்

நெதர்லாந்து - 139/8	**பங்களாதேஷ் - 141/4**

பங்களாதேஷ் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஜுவைரியா பெர்டோஸ் - 50

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 14, பிர்மிங்கம்

இந்தியா - 170/6	**பாகிஸ்தான் - 106**

இந்தியா 64 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - தீப்தி சர்மா - 12* & 5/10

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 16, சௌதம்ப்டன்

நியூஸிலாந்து - 150/6	**இலங்கை - 153/5**

இலங்கை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - நிலக்ஷிகா சில்வா - 54*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 16, சௌதம்ப்டன்

அயர்லாந்து - 118/9	**இங்கிலாந்து - 119/6**

இங்கிலாந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சோபி ஏக்லஸ்டோன் - 3/22

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 17, லீட்ஸ்

பங்களாதேஷ் - 77/8 | **ஆஸ்திரேலியா - 78/1**

ஆஸ்திரேலியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - எல்லிஸ் பெர்ரி - 2/14 & 19*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 17, லீட்ஸ்

இந்தியா - 209/5 | **நெதர்லாந்து - 114**

இந்தியா 95 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஸ்மிருதி மந்தனா - 74 & 2 கேட்ச்கள்

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 17, பிர்மிங்கம்

பாகிஸ்தான் - 126/9 | **தென் ஆப்பிரிக்கா - 127/8**

தென் ஆப்பிரிக்கா 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - அந்நெறி டெர்க்சன் - 52

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 18, லீட்ஸ்

வெஸ்ட் இண்டீஸ் - 153/6 | **ஸ்காட்லாந்து - 146**

வெஸ்ட் இண்டீஸ் 7 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஸ்டபானி டைலர் - 47*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 19, சௌதம்ப்டன்

நியூஸிலாந்து - 140/6 | **அயர்லாந்து - 136/4**

நியூஸிலாந்து 4 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - அமெலியா கெர் - 30 & 2/23

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 20, சௌதம்ப்டன்

ஆஸ்திரேலியா - 219/6 | **நெதர்லாந்து - 121/3**

ஆஸ்திரேலியா 98 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - பெத் மோனி - 74*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 20, சௌதம்ப்டன்

பங்களாதேஷ் - 123/6 | **பாகிஸ்தான் - 100/8**

பங்களாதேஷ் 23 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சொர்ணா அஃதெர் - 39*

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 20, லீட்ஸ்

இங்கிலாந்து - 200/5	**ஸ்காட்லாந்து - 162/7**

இங்கிலாந்து 38 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஷோபியா டங்களே - 57

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 21, பிரிஸ்டல்

இலங்கை - 98	**வெஸ்ட் இண்டீஸ் - 99/5**

வெஸ்ட் இண்டீஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஹெய்லே மேத்தியூஸ் - 3/15 & 17

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 21, மான்செஸ்டர்

இந்தியா - 158/7	**தென் ஆப்பிரிக்கா - 161/4**

தென் ஆப்பிரிக்கா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - மரிஸான் காப் - 2/27 & 81*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 23, பிரிஸ்டல்

ஸ்காட்லாந்து - 131/7	**நியூஸிலாந்து - 132/4**

நியூஸிலாந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - இஸ்சி ஷார்ப் - 62

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 23, பிரிஸ்டல்

அயர்லாந்து - 130/5	**இலங்கை - 134/1**

இலங்கை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சமாரி அட்டபட்டு - 1/23 & 106*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 23, லீட்ஸ்

ஆஸ்திரேலியா - 199/7	**பாகிஸ்தான் - 86**

ஆஸ்திரேலியா 113 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - எல்லிஸ் பெர்ரி - 71 & 2/9

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 24, லார்ட்ஸ்

இங்கிலாந்து - 186/7	**வெஸ்ட் இண்டீஸ் - 148/5**

இங்கிலாந்து 38 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - டன்னி வாட் ஹோட்ஜ் -65

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 25, மான்செஸ்டர்

பங்களாதேஷ் - 136/8	**இந்தியா - 139/5**

இந்தியா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஷபாலி வர்மா - 53

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 26, மான்செஸ்டர்

ஸ்காட்லாந்து - 151/6	**இலங்கை - 154/7**

இலங்கை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - நிலக்ஷிகா சில்வா - 21*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 27, பிரிஸ்டல்

பாகிஸ்தான் - 126/6	**நெதர்லாந்து - 89**

பாகிஸ்தான் 37 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - குல் பெரோஷா - 63*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 27, பிரிஸ்டல்

வெஸ்ட் இண்டீஸ் - 128/7	**அயர்லாந்து - 129/4**

அயர்லாந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஒர்லா பிரெண்டெர்காஸ்ட் - 63, 1/23 & 2 கேட்ச்கள்

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 27, ஓவல்

நியூஸிலாந்து - 163/6	**இங்கிலாந்து - 164/1**

இங்கிலாந்து 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - டன்னி வாட் ஹோட்ஜ் -89*

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 28, லார்ட்ஸ்

பங்களாதேஷ் - 117/5	**தென் ஆப்பிரிக்கா - 118/6**

தென் ஆப்பிரிக்கா 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - மரிஸான் காப் - 16 & 1/9

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 28, லார்ட்ஸ்

இந்தியா - 170/4	**ஆஸ்திரேலியா - 172/4**

ஆஸ்திரேலியா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - எல்லிஸ் பெர்ரி - 56

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

டி20 உலகக்கோப்பை 2026, ஜூன் 30, ஓவல்

வெஸ்ட் இண்டீஸ் - 125/7	**ஆஸ்திரேலியா - 127/2**

ஆஸ்திரேலியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஆஷ்லே கார்ட்னர் - 35* & 2/13

21ம் நூற்றாண்டின் டாப் 25

ஈஎஸ்பிஎன் கிரிக்இன்ஃபோ நிறுவனம் இந்த நூற்றாண்டின் சிறந்த 25 வீரர்களை வரிசைப்படுத்தியுள்ளது. இது முழுக்க முழுக்கத் தேர்வுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள்.

தேர்வுக்குழுவில் இடம்பெற்றவர்கள் அஜித் அகர்கர், வாசிம் அக்ரம், இயன் பிஷப், மார்க் பவுச்சர், கார்லஸ் பிராத்வெயிட், கிரேக் சேப்பல், ஆலன் டொனால்ட், பாப் டுபிளசிஸ், ஆரோன் பின்ச், ஆன்டி பிளவர், டேவிட் கோவர், ஸ்டீபன் ஹார்மிசன், மேத்யூ ஹேடன், ஷான் மசூத், டாம் மூடி, ஏஞ்சலோ மேத்யூஸ், இயான் மோர்கன், சட்டேஸ்வர் புஜாரா, ரவி சாஸ்திரி, ராஸ் டெய்லர், ஜோனதன் டிராட், டேனியல் வெட்டோரி, ஷேன் வாட்சன் மற்றும் இர்பான் பதான்.

மூன்றுவிதப் போட்டிகளையும் கணக்கில் கொண்டு எடுக்கப்பட்ட இந்தப் பட்டியலில் இந்திய வீரர்கள் ஏழு பேர் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய வீரர்கள் நீண்ட காலம் விளையாடுகிறார்கள் என்பதை இது காட்டுகிறது. இந்திய வீரர்கள் புகழ் பெற்றுவிட்டால் அவர்களுக்குத் தொடர்ந்து வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. அதேசமயம் இந்தியா திறமையான வீரர்களைத் தொடர்ந்து உருவாக்குகிறது என்பதும் தெரிகிறது.

இந்தப் பட்டியலில் ஒரு பாகிஸ்தான் வீரர் கூட இல்லை, 2000க்குப் பிறகு பாகிஸ்தான் அணியில் நீண்டகாலமாக யாரும் விளையாடவில்லை என்பதைக் காட்டுகிறது. நிறையப் பிரச்சினைகளில் சிக்கிய வெஸ்ட் இண்டீஸ் அணியில் இருந்து கிறிஸ் கெயில் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

வீரர்களின் பட்டியல்:

25. ரவிச்சந்திரன் அஸ்வின் - இந்தியா - வலதுகை பேட்ஸ்மேன், வலதுகை ஆஃப் ஸ்பின்னர்

765 விக்கெட்டுகள், சராசரி 25.81. 4394 ரன்கள், சராசரி 23.62.

24. ஸ்டுவர்ட் பிராட் - இங்கிலாந்து - வலதுகை வேகப்பந்துவீச்சாளர், இடதுகை பேட்டர்

847 விக்கெட்டுகள், சராசரி 27.83. 4309 ரன்கள்.

23. கெவின் பீட்டர்சன் - இங்கிலாந்து - வலதுகை பேட்டர்

13797 ரன்கள், சராசரி 44.28.

22. வீரேந்திர் சேவாக் - இந்தியா - வலதுகை பேட்டர், வலதுகை ஆஃப் ஸ்பின்னர்

17,252 ரன்கள், சராசரி 40.40. 136 விக்கெட்டுகள்.

21. மகேளா ஜெயவர்த்தனே - இலங்கை, வலதுகை பேட்டர்

24,182 ரன்கள், சராசரி 39.84.

20. பாட் கம்மின்ஸ் - ஆஸ்திரேலியா - வலதுகை வேகப்பந்துவீச்சாளர், வலதுகை பேட்டர்

524 விக்கெட்டுகள், சராசரி 24.08. 2262 ரன்கள்.

19. பென் ஸ்டோக்ஸ் - இங்கிலாந்து - இடதுகை பேட்டர், வலதுகை வேகப்பந்துவீச்சாளர்

11,263 ரன்கள், சராசரி 35.64. 343 விக்கெட்டுகள், சராசரி - 33.68

18. கிறிஸ் கெயில் - வெஸ்ட் இண்டீஸ் - இடதுகை பேட்டர், வலதுகை ஆஃப் ஸ்பின்னர்

19,535 ரன்கள், சராசரி 38.38. 257 விக்கெட்டுகள்.

17. மிட்செல் ஸ்டார்க் - ஆஸ்திரேலியா - இடதுகை வேகப்பந்துவீச்சாளர், இடதுகை பேட்டர்

754 விக்கெட்டுகள், சராசரி 25.22. 3154 ரன்கள்.

16. கேன் வில்லியம்சன் - நியூசிலாந்து - வலதுகை பேட்டர், வலதுகை ஆஃப் ஸ்பின்னர்

19,292 ரன்கள், சராசரி 49.49. 73 விக்கெட்டுகள்.

15. ஜஸ்பிரிட் பும்ரா - இந்தியா - வலதுகை வேகப்பந்துவீச்சாளர்

486 விக்கெட்டுகள், சராசரி 20.6.

14. மகேந்திர சிங் தோனி - இந்தியா - வலதுகை பேட்டர், விக்கெட்கீப்பர்

17,266 ரன்கள், சராசரி 44.96. 829 டிஸ்மிஸல்.

13. ஜேம்ஸ் ஆண்டர்சன் - இங்கிலாந்து - வலதுகை வேகப்பந்துவீச்சாளர்

991 விக்கெட்டுகள், சராசரி 27.18.

12. ராகுல் டிராவிட் - இந்தியா - வலதுகை பேட்டர், விக்கெட்கீப்பர்

18,040 ரன்கள், சராசரி 46.62. 78 டிஸ்மிஸல்.

11. ஆடம் கில்கிறிஸ்ட் - ஆஸ்திரேலியா - இடதுகை பேட்டர், விக்கெட்கீப்பர்

12,645 ரன்கள், சராசரி 39.52. 776 டிஸ்மிஸல்.

10. ஸ்டீவ் ஸ்மித் - ஆஸ்திரேலியா - வலதுகை பேட்டர், லெக் ஸ்பின்னர்

17,507 ரன்கள், சராசரி 47.57. 64 விக்கெட்டுகள்.

9. ஜோ ரூட் - இங்கிலாந்து - வலதுகை பேட்டர், வலதுகை ஆஃப் ஸ்பின்னர்

22,000 ரன்கள், சராசரி 49.21. 107 விக்கெட்டுகள்.

8. டேல் ஸ்டெயின் - தென்னாப்பிரிக்கா - வலதுகை வேகப்பந்துவீச்சாளர்

699 விக்கெட்டுகள், சராசரி 23.37.

7. குமார் சங்கக்கார - இலங்கை - இடதுகை பேட்டர், விக்கெட் கீப்பர்

28016 ரன்கள், சராசரி 46.77. 671 டிஸ்மிஸல்.

6. ஆபிரகாம் டிவில்லியர்ஸ் - தென்னாப்பிரிக்கா - வலதுகை பேட்டர், விக்கெட்கீப்பர்

20,014 ரன்கள், சராசரி 48.11. 219 டிஸ்மிஸல்.

5. ரிக்கி பாண்டிங் - ஆஸ்திரேலியா - வலதுகை பேட்டர்

22,183 ரன்கள், சராசரி 47.

5. முத்தையா முரளிதரன் - இலங்கை - வலதுகை ஆஃப் ஸ்பின்னர்

943 விக்கெட்டுகள், சராசரி 21, எகானமி 2.88.

3. விராட் கோலி - இந்தியா - வலதுகை பேட்டர்

27975 ரன்கள், சராசரி 52.58.

2. சச்சின் டெண்டுல்கர் - இந்தியா - வலதுகை பேட்டர், வலதுகை ஸ்பின்னர்

19,945 ரன்கள், சராசரி 49.25. 110 விக்கெட்டுகள்.

1.ஜேக் காலிஸ் - தென்னாப்பிரிக்கா - வலதுகை பேட்டர், வலதுகை வேகப்பந்து வீச்சாளர்

21,135 ரன்கள், சராசரி 51.29. 468 விக்கெட்டுகள், சராசரி 32.76.

#BeTheBetterInvestor
மியூச்சுவல் ஃபண்ட்
முதலீடு சரியானது...
ஆனால் எது?
இதற்கு யார்
வழிகாட்டுவார்கள்?
இப்பொழுதே பதிவு செய்து
ஒரு மியூச்சுவல் ஃபண்ட் வினியோகஸ்தரிடமிருந்து முறையான வழிகாட்டுதலைப் பெறுங்கள்
WEALTH
இந்தியாவின் மிகப்பெரிய மியூச்சுவல் ஃபண்ட் வினியோகஸ்தர்
என்ஜே இந்தியா இன்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் - ஏஎம்எஃப்ஐ பதிவு செய்த மியூச்சுவல் ஃபண்ட் வினியோகஸ்தர்
மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை. திட்டம் சார்ந்த எல்லா ஆவணங்களையும் கவனமாகப் படிக்கவும்.
MIS
Mahalakshmi Investment Services
M S RAMASUBRAMANIAN
MOBILE: 9894458655
Email: ramasubbums@gmail.com
Website: http://p.njw.bz/30935
M S RAMASUBRAMANIAN - AMFI REGISTERED MUTUAL FUND DISTRIBUTOR

டெஸ்ட் போட்டி முடிவுகள்

இங்கிலாந்து - நியூஸிலாந்து முதல் டெஸ்ட், ஜூன் 04-08, லார்ட்ஸ்

இங்கிலாந்து - 140	**நியூஸிலாந்து - 113**
இங்கிலாந்து - 226	**நியூஸிலாந்து - 138**

இங்கிலாந்து 115 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஒலி ராபின்சன் - 5/39, 29 & 2/38

இந்தியா - ஆப்கானிஸ்தான் டெஸ்ட், ஜூன் 06-10, நியூ சண்டிகர்

இந்தியா - 564/8 டிக்	**ஆப்கானிஸ்தான் - 152**
இந்தியா	**ஆப்கானிஸ்தான் - 112**

இந்தியா இன்னிங்ஸ் & 300 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மானவ் சுதர் - 28, 6/33 & 1/29

இங்கிலாந்து - நியூஸிலாந்து 2வது டெஸ்ட், ஜூன் 17-21, ஓவல்

நியூஸிலாந்து - 391	**இங்கிலாந்து - 291**
நியூஸிலாந்து - 362	**இங்கிலாந்து - 209**

நியூஸிலாந்து 253 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மாட் ஹென்றி - 5/80 & 6/29

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை முதல் டெஸ்ட், ஜூன் 25-29, ஆன்டிகுவா

இலங்கை - 308	**வெஸ்ட் இண்டீஸ் - 626/9 டிக்**
இலங்கை - 101	**வெஸ்ட் இண்டீஸ் -**

வெஸ்ட் இண்டீஸ் இன்னிங்ஸ் & 217 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - அமீர் ஜாங்கோ - 233

இங்கிலாந்து - நியூஸிலாந்து 3வது டெஸ்ட், ஜூன் 25- 29, நாட்டிங்காம்

நியூஸிலாந்து - 438	**இங்கிலாந்து - 354**
நியூஸிலாந்து - 288/9 டிக்	**இங்கிலாந்து - 212**

நியூஸிலாந்து 160 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - டேரில் மிட்செல் - 100* & 5 கேட்ச்கள்

ஜிம்பாப்வே - பங்களாதேஷ் டெஸ்ட், ஜூன் 28-30, ஹராரே

பங்களாதேஷ் -140	**ஜிம்பாப்வே - 410**
பங்களாதேஷ் -185	**ஜிம்பாப்வே**

ஜிம்பாப்வே இன்னிங்ஸ் & 85 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - இன்னொசென்ட் கியா -140

டி20 போட்டி முடிவுகள்*

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை முதல் டி20, ஜூன் 11, ஜமைக்கா

இலங்கை - 147/9	**வெஸ்ட் இண்டீஸ் - 149/3**

வெஸ்ட் இண்டீஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஜேசன் ஹோல்டர் - 3/18

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை 2வது டி20, ஜூன் 13, ஜமைக்கா

இலங்கை - 194/6	**வெஸ்ட் இண்டீஸ் - 157**

இலங்கை 37 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - தசுன் ஷானக - 58

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை 3வது டி20, ஜூன் 14, ஜமைக்கா

இலங்கை - 169	**வெஸ்ட் இண்டீஸ் - 170/5**

வெஸ்ட் இண்டீஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷமர் ஜோசப் - 5/33

பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா முதல் டி20, ஜூன் 17, சாட்டோகிராம்

பங்களாதேஷ் - 131	**ஆஸ்திரேலியா - 133/6**

ஆஸ்திரேலியா 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஆடம் ஸாம்பா - 3/18

பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா 2வது டி20, ஜூன் 19, சாட்டோகிராம்

ஆஸ்திரேலியா - 196/5	**பங்களாதேஷ் - 189/6**

ஆஸ்திரேலியா 7 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மாட் ரென்ஷா - 89* & 1/13

பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா 3வது டி20, ஜூன் 21, சாட்டோகிராம்

பங்களாதேஷ் - 109/8	**ஆஸ்திரேலியா - 112/3**

ஆஸ்திரேலியா 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மிட்செல் மார்ஷ் - 60

அயர்லாந்து - இந்தியா முதல் டி20, ஜூன் 26, பெல்பாஸ்ட்

அயர்லாந்து - 182/9	**இந்தியா - 148**

அயர்லாந்து 34 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மாட் ஹால்லர்ட் - 3/28

அயர்லாந்து - இந்தியா 2வது டி20, ஜூன் 28, பெல்பாஸ்ட்

அயர்லாந்து - 154/9	**இந்தியா - 153/9**

அயர்லாந்து 1 ரன் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஜெய் மூன்றா - 3/32

---

*முக்கிய அணிகளின் போட்டி மட்டுமே தரப்பட்டுள்ளது

டக்வொர்த் லீவிஸ் முறைப்படி

ஒரு நாள் போட்டி முடிவுகள்

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா 2வது ஒருநாள், ஜூன் 02, லாகூர்

ஆஸ்திரேலியா - 231/9	**பாகிஸ்தான் -190**

ஆஸ்திரேலியா 41 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - நாதன் எல்லிஸ் - 4/33

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை முதல் ஒருநாள், ஜூன் 03, ஜமைக்கா

இலங்கை - 303/7	**வெஸ்ட் இண்டீஸ் - 262**

இலங்கை 41 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - குஷால் மெண்டிஸ் - 72

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா 3வது ஒருநாள், ஜூன் 02, லாகூர்

ஆஸ்திரேலியா - 157	**பாகிஸ்தான் -161/6**

பாகிஸ்தான் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷாஹின் அப்ரிடி - 3/30

உலகக் கோப்பை லீக் - 2, ஜூன் 06, கிங் சிட்டி

கனடா - 231/8	**அமெரிக்கா - 235/2**

அமெரிக்கா 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சினேகன் ஜெயசூர்ய - 113*

உலகக் கோப்பை லீக் - 2, ஜூன் 08, கிங் சிட்டி

நெதர்லாந்து - 196/8	**அமெரிக்கா - 175**

நெதர்லாந்து 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மேக்ஸ் ஓ தவுத் - 59

பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா முதல் ஒருநாள், ஜூன் 09, மிர்பூர்

பங்களாதேஷ் - 284/8	**ஆஸ்திரேலியா - 191/9**

பங்களாதேஷ் 86 ரன்கள்# வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மோஸடெக் ஹொசைன் - 86* & 2/37

உலகக் கோப்பை லீக் - 2, ஜூன் 10, கிங் சிட்டி

நெதர்லாந்து - 214	**கனடா - 214/8**

கனடா 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஸ்ரேயாஸ் மொவ்வா - 83*

பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா 2வது ஒருநாள், ஜூன் 11, மிர்பூர்

ஆஸ்திரேலியா - 187/8	**பங்களாதேஷ் - 195/5**

பங்களாதேஷ் 5 விக்கெட்டுகள்# வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - முஸ்டாபிஸுர் ரஹ்மான் - 3/27

ஒரு நாள் போட்டி முடிவுகள்

உலகக் கோப்பை லீக் - 2, ஜூன் 12, கிங் சிட்டி

கனடா - 275/8	**அமெரிக்கா - 276/5**

அமெரிக்கா 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மிலிந்த் குமார் - 1/42 & 111*

இந்தியா - ஆப்கானிஸ்தான் முதல் ஒருநாள், ஜூன் 13, நியூ சண்டிகர்

ஆப்கானிஸ்தான் - 194	**இந்தியா - 195/3**

இந்தியா 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சுப்மன் கில் - 84* & 2 கேட்ச்கள்

பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா 3வது ஒருநாள், ஜூன் 14, மிர்பூர்

பங்களாதேஷ் - 274/5	**ஆஸ்திரேலியா - 277/9**

ஆஸ்திரேலியா 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - கூப்பர் கொன்னலி - 149

உலகக் கோப்பை லீக் - 2, ஜூன் 16, கிங் சிட்டி

நெதர்லாந்து - 15/1	**கனடா -**

முடிவு இல்லை**

இந்தியா - ஆப்கானிஸ்தான் 2வது ஒருநாள், ஜூன் 17, லக்னோ

இந்தியா - 402	**ஆப்கானிஸ்தான் - 232**

இந்தியா 170 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சுப்மன் கில் - 154

இந்தியா - ஆப்கானிஸ்தான் 3வது ஒருநாள், ஜூன் 20, சென்னை

ஆப்கானிஸ்தான் - 218	**இந்தியா - 224/1**

இந்தியா 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பிரசித் கிருஷ்ணா - 5/23

டக்வொர்த் லீவிஸ் முறைப்படி

** கனடா - நெதர்லாந்து ஒருநாள் போட்டி 4 ஓவர்கள் வீசிய நிலையில் மோசமான ஆடுகளம் காரணமாக நிறுத்தப்பட்டது.

இங்கிலாந்து - இந்தியா (மகளிர்)

உலகக்கோப்பைக்கு முன்பாக 3 டி20 போட்டிகள் கொண்ட தொடர் இந்திய அணிக்கு சிறந்த பயிற்சி மற்றும் இங்கிலாந்தைப் பழகும்விதமாக அமைந்தது. முதல் போட்டி செல்ம்ஸ்போர்டில் நடைபெற்றது. இந்திய அணியின் பொறுப்புக் கேப்டனாக மந்தனா செயல்பட்டார். ஏழு ரன்களுக்கு இந்தியா 2 விக்கெட்டுகளை இழந்தது. யாஷ்டிகா பாட்டியா (54) - ஜெமீமா ரோட்ரிக்ஸ் (69) அடித்து ஆடினர். இந்தியா 188 ரன்கள் எடுத்தது. லாரன் பெல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சேஸ் செய்த இங்கிலாந்து அணியின் கீப்பர் எமி ஜோன்ஸ் அரைசதம் (67) அடிக்க, வேறு யாரும் பெரிய அளவில் ஆடாததால் 150 ரன்களை எடுத்தது. இந்தியா 38 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. அறிமுக வீராங்கனை நந்தினி சர்மா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். கிராந்தி கௌட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகி - ஜெமீமா ரோட்ரிக்ஸ் – 69

2வது போட்டி பிரிஸ்டலில் நடைபெற்றது. இறுதிக்கட்டத்தில் இங்கிலாந்து அணியின் ப்ரேயா கெம்ப் அதிரடி காட்ட (13 பந்துகளில் 39 ரன்கள்), 168 ரன்கள் எடுத்தது. ஶ்ரீ சரணி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா சிறப்பாகத் துவங்கி, பிறகு சரிந்தது. முதல் நான்கு வீராங்கனைகளைத் தவிர யாரும் இரட்டை இலக்க ரன்கள் எடுக்கவில்லை. ரிட்டயர்ட் அவுட் முறையில் வெளியேறிய யாஷ்டிகா பாட்டியா அதிகபட்சமாக 33 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து 26 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. லாரன் பெல், சார்லி டீன், ப்ரேயா கெம்ப் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகி - ப்ரேயா கெம்ப் - 39* & 2/15

3வது போட்டி டவுண்டனில் நடைபெற்றது. இந்தியக் கேப்டன் ஹர்மன்பிரீட் 56* ரன்கள் அடித்தார். யாஷ்டிகா & தீப்தி தலா 32 ரன்கள் அடிக்க, இந்தியா 180 ரன்கள் எடுத்தது. லாரன் பெல் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அலைஸ் கேப்ஸி (82), ஹீதர் நைட் (70*) அரைசதங்கள் அடிக்க, இங்கிலாந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. கிராந்தி கௌட் & அருந்ததி ரெட்டி தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகி - அலைஸ் கேப்ஸி - 82

தொடர் நாயகி - அலைஸ் கேப்ஸி - 116 ரன்கள்

வெஸ்ட் இண்டீஸில் இலங்கை

இலங்கை அணி மூன்றுவிதப் போட்டிகளிலும் விளையாட வெஸ்ட் இண்டீஸ் சென்றது. முதலில் ஒருநாள் தொடர் ஜமைக்காவில் நடைபெற்றது.

ஒருநாள் தொடர்

இலங்கை அணிக்கு மீண்டும் கேப்டனானார் குஷால் மெண்டிஸ். முதல் போட்டியில் பதும் நிஸங்க (79) மற்றும் குஷால் மெண்டிஸ் (72) அரைசதங்களால் 303 ரன்களைக் குவித்தது. ஜெய்டன் ஸீல்ஸ், மேத்யூ போர்ட் & ராஸ்டன் சேஸ் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சேஸ் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி 262 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. கேப்டன் ஷாய் ஹோப் 56 ரன்கள் அடித்தார். துஷ்மந்த சமீர 4 விக்கெட்டுகளையும், மகீஷ் தீக்சான 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - குஷால் மெண்டிஸ் - 72

2வது போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் டாஸ் வென்று பந்துவீச முடிவு செய்தது. ஆனால் ஒரு பந்து கூட வீசாமல் மழையால் போட்டி முடிவு இல்லாமல் போனது. 3வது போட்டியும் மழையால் கைவிடப்பட, தொடரை இலங்கை வென்றது.

டி20 தொடர்

டி20 தொடரும் ஜமைக்காவில் நடைபெற்றது. முதல் போட்டியில் ஜேசன் ஹோல்டர் மற்றும் ஷமர் ஜோசப் தலா 3 விக்கெட்டுகளை எடுக்க இலங்கை 147 ரன்களே எடுத்தது. கமிந்து மெண்டிஸ் அரைசதம் (51) அடித்தார். வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் ஷாய் ஹோப் அரைசதம் (65*) அடிக்க எளிதாக வென்றது. ஹசரங்க 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - ஜேசன் ஹோல்டர் - 3/18

2வது போட்டியில் கமில் மிஸார அரைசதம் (61*) மற்றும் தசுன் ஷானக அரைசதம் (58) மூலமாக 194 ரன்களைக் குவித்தது. ஷமர் ஜோசப் 3 விக்கெட்டுகளையும், மேத்யூ போர்ட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். வெஸ்ட் இண்டீஸ் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து 157 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ராவ்மென் பவல் 43 ரன்கள் அடித்தார். ஹசரங்க & சமீர தலா 3 விக்கெட்டுகளையும், வெல்லலாகே 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - தசுன் ஷானக - 58

3வது போட்டியிலும் இலங்கை முதலில் பேட்டிங் செய்தது. ஷமர் ஜோசப் 5 விக்கெட்டுகளை வீழ்த்த, இலங்கை 169 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ரூதர்போர்ட் அரைசதத்தால் (54*) இலக்கை எட்டியது வெஸ்ட் இண்டீஸ். ஹசரங்க 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - ஷமர் ஜோசப் - 5/33

தொடர் நாயகன் - ஷமர் ஜோசப் - 11 விக்கெட்டுகள்.

[டெஸ்ட் தொடர் அடுத்த இதழில்]

2027 உலகக் கோப்பை தகுதி பெற அஸோஸியேட் அணிகளுக்கிடையே ஒரு நாள் போட்டியை நடத்துகிறது ஐசிசி

உலகக் கோப்பை லீக்-2 புள்ளிப் பட்டியல்

இடம்	அணிகள்	போட்டிகள்	வெற்றி	தோல்வி	டை	மு இ	புள்ளிகள்	நி ர ரே
1	அமெரிக்கா	32	21	10	0	1	43	0.693
2	ஸ்காட்லாந்து	32	16	10	0	6	38	0.631
3	நெதர்லாந்து	28	14	10	0	4	32	0.164
4	ஓமன்	28	14	11	0	3	31	0.018
5	நேபாள்	28	11	15	0	2	24	0.023
6	கனடா	28	10	14	0	4	24	-0.203
7	நமீபியா	28	10	16	0	2	22	-0.491
8	எமிரேட்ஸ்	24	7	17	0	0	14	-1.016

மு இ - முடிவு இல்லாதவை

நி ர ரே- நிகர ரன் ரேட்

ஒவ்வொரு அணியும் 36 போட்டிகளில் ஆடும். தொடர் இறுதியில் முதல் நான்கு இடங்களை பெறும் அணிகள் உலகக் கோப்பை தகுதிச்சுற்று தொடரில் ஆடும்.

விதர்பா பிரீமியர் லீக்

நாக்பூரை மையமாகக் கொண்ட விதர்பா பிரீமியர் லீக் ஜூன் 1 முதல் ஜூன் 14 வரை நடைபெற்றது. பாரத் ரேஞ்சர்ஸ், பஹரியா ஸ்ட்ரைக்கர்ஸ், ஆரஞ்ச் டைகர்ஸ், நாக்பூர் டைகர்ஸ், இந்தியா வாரியர்ஸ், மாஸ்டர் பிளாஸ்டர்ஸ் என 6 அணிகள் பங்கேற்றன. இதில் மாஸ்டர் பிளாஸ்டர்ஸ் அணி 7 லீக் போட்டிகளிலும் தோற்றது.

<u>எலிமினேட்டர், ஜூன் 12</u>

எலிமினேட்டர் போட்டியில் ஆரஞ்ச் டைகர்ஸ் மற்றும் நாக்பூர் ஹீரோஸ் அணிகள் மோத இருந்தன. ஆட்டம் மழையால் தடைபட, ஆரஞ்ச் டைகர்ஸ் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

<u>குவாலிபயர் 1, ஜூன் 12</u>

பஹரியா ஸ்ட்ரைக்கர்ஸ் - 230/9

ஆதித்யா அகுஜா - 109

சுபம் கப்சே - 3/47

பாரத் ரேஞ்சர்ஸ் - 233/5

வேதாந்த் ஜஜோ - 62

புஷ்பக் குஜர் - 2/27

பாரத் ரேஞ்சர்ஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

<u>குவாலிபயர் 2, ஜூன் 13</u>

ஆரஞ்ச் டைகர்ஸ் - 150

அத்யான் ரௌதன் - 25

க்ஷிதிஷ் தாஹியா - 25

ஜஸ்வந்திர் சிங் டாக் - 2/22

பஹரியா ஸ்ட்ரைக்கர்ஸ் - 152/5

ரவிக்குமார் சமர்த் - 60*

க்ஷிதிஷ் தாஹியா - 1/9

பஹரியா ஸ்ட்ரைக்கர்ஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

<u>இறுதிப் போட்டி, ஜூன் 14</u>

பஹரியா ஸ்ட்ரைக்கர்ஸ் - 249/3

யாஷ் கதம் - 73*

நாசிகெட் பூட்டே - 2/36

பாரத் ரேஞ்சர்ஸ் - 241/8

மனன் அகர்வால் - 67

கவ்டுப் சால்வ் - 2/31

பஹரியா ஸ்ட்ரைக்கர்ஸ் 8 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

****

விதர்பா பிரீமியர் லீக் பூவையர் தொடரில் இந்தியா வாரியர்ஸ் அணி (142/6), மாஸ்டர் பிளாஸ்டர்ஸ் அணியை (140/8) 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

<u>மாதம் ஒரு மங்கை</u>

மாதம் ஒரு மங்கை பகுதியில் இந்த மாதம் மிதாலி ராஜ்.

மிதாலி ஒரு தமிழ்குடும்பத்தில் பிறந்தவர். மிதாலியின் தந்தை விமானப்படையில் வேலை பார்த்தவர். மிதாலி பிறந்தது ராஜஸ்தானில், வளர்ந்தது ஹைதராபாத்தில். மிதாலி ஒரு பரத நாட்டியக் கலைஞரும் கூட.

மிதாலி முதலில் ஏர் இந்தியா அணிக்காகவும், பிறகு ரயில்வேஸ் அணிக்காகவும் உள்ளூர் போட்டிகளில் ஆடினார். 1999ல் அயர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆடியது தான் அவரது முதல் சர்வதேசப் போட்டி.

தனது பேட்டால் பல சாதனைகளைப் புரிந்தவர் மிதாலி. ஒருநாள் போட்டிகளில் 7000 ரன்களைக் கடந்த ஒரே வீராங்கனை மிதாலி. தொடர்ச்சியாக 7 போட்டிகளில் அரைசதம் அடித்து சாதனை படைத்தவர். சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்த முதல் வீராங்கனை.

200 ஒருநாள் போட்டிகளில் ஆடிய முதல் வீராங்கனை. 2022ல் மிதாலி ராஜ் சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றார்.

மிதாலியை மகளிர் கிரிக்கெட்டின் டெண்டுல்கர்* என்று அழைத்தார்கள் (*மகளிர் கிரிக்கெட்டை ஆடவர் கிரிக்கெட்டோடு ஒப்பிடுவது தவறு. ஆடவர் கிரிக்கெட்டர் யாரையாவது இவர் ஆடவர் கிரிக்கெட்டின் மிதாலி அல்லது மந்தனா என்று அழைப்பார்களா?). மிதாலி 2003ல் அர்ஜூனா விருது பெற்றார். 2015ல் பத்மஸ்ரீ விருது பெற்றார். 2021ல் கேல் ரத்னா விருது பெற்றார்.

2018 டி20 உலகக்கோப்பைக்குப் பிறகு மிதாலி, பயிற்சியாளர் ரமேஷ் பவார் பாரபட்சம் காட்டுவதாக சொன்னதால் சர்ச்சை ஏற்பட்டது. ரமேஷ் பவார், மிதாலி ஓய்வுபெறுவேன் என்று மிரட்டியதாகக் கூறினார்.

அசைக்க முடியாத சாதனைகளைப் படைத்த மிதாலி ராஜ், 2004 முதல் 2022 வரை இந்திய அணியின் கேப்டனாக செயல்பட்டார். மிதாலியின் கிரிக்கெட் வாழ்க்கை குறித்து "சபாஷ் மித்து" என்ற திரைப்படம் 2022ல் வெளியானது.

மிதாலி தற்போது வர்ணனையாளராகப் பணியாற்றுகிறார்.

	போட்டிகள்	**இன்னிங்ஸ்**	**மொத்த ரன்கள்**	**100**	**50**	**கேட்ச்**
டெஸ்ட்	12	19	699	1	4	12
ஒரு நாள்	232	211	7805	7	64	64
டி 20	89	84	2364	0	17	19

சாதனைத் துளிகள்

டி20 உலகக்கோப்பையில் அதிக விக்கெட்டுகள்

வ எண்	வீராங்கனை	அணி	போட்டிகள்	இன்னிங்ஸ்	விக்கெட்டுகள்
1	ஷப்னிம் இஸ்மாயில்	தென் ஆப்பிரிக்கா	37	37	49
2	மேஹன் ஸூட்	ஆஸ்திரேலியா	30	30	48
3	எல்லிஸ் பெர்ரி	ஆஸ்திரேலியா	53	45	44
4	அன்யா ஸ்ருப்சோல்	இங்கிலாந்து	27	27	41
5	மரிஸான் காப்	தென் ஆப்பிரிக்கா	37	36	38
6	ஷோபி எக்லஸ்டோன்	இங்கிலாந்து	23	23	37
7	அமெலியா கெர்	நியூசிலாந்து	23	23	37
8	ஸ்டபெயின் டெய்லர்	வெஸ்ட் இண்டீஸ்	40	27	33
9	டீன்ரா டட்டின்	வெஸ்ட் இண்டீஸ்	41	22	32
10	எபி பிளெட்சர்	வெஸ்ட் இண்டீஸ்	29	29	32

டி20 உலகக்கோப்பையில் அதிக ரன்கள்

வ எண்	வீராங்கனை	அணி	போட்டிகள்	இன்னிங்ஸ்	ரன்கள்
1	சுசி பேட்ஸ்	நியூசிலாந்து	45	44	1254
2	ஸ்டபெயின் டெய்லர்	வெஸ்ட் இண்டீஸ்	40	39	1104
3	அலைஸ்ஸா ஹீலி	ஆஸ்திரேலியா	42	39	1008
4	மெக் லென்னிங்	ஆஸ்திரேலியா	35	32	992
5	பெத் மூனி	ஆஸ்திரேலியா	34	31	926
6	சமாரி அட்டபட்டு	இலங்கை	37	37	883
7	ஷோபி டிவைன்	நியூசிலாந்து	41	41	883
8	டீன்ரா டட்டின்	வெஸ்ட் இண்டீஸ்	41	40	868
9	ஹர்மன்பிரீட் கவுர்	இந்தியா	44	38	867
10	நாட் ஷிவர் புருண்ட்	இங்கிலாந்து	31	29	832

மறக்க முடியாத வீரர் மன்கட்

- சி.பூவேந்தன்

கிரிக்கெட்டில் நாம் எத்தனையோ முறைகளில் பேட்ஸ்மேன்கள் அவுட் ஆவதை பார்த்திருப்போம்.

கேட்ச், ஹிட் அவுட், ஸ்டம்பிங், ரன் அவுட் என அந்தந்த முறையில் அவுட் ஆகும் பெயரில் அதை சொல்லுவாங்க.

ஆனால் ஒரு விக்கெட் விழுந்தால் அந்த விக்கெட்டுக்கு இன்னொரு கிரிக்கெட் வீரர் பெயர் இருக்கும் என்றால் அந்தப் பெயருக்கு சொந்தக்காரர் ‘மன்கட்’. ஆம், வினு மன்கட் மறக்க முடியாத இந்தியக் கிரிக்கெட் அணியின் புரட்சி வீரர்.

<u>அறிமுகம்:</u>
வினு மன்கட் (1917–1978) இந்தியக் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு மிக முக்கியமான ஆல்ரவுண்டர் மற்றும் கேப்டன்.

அவர் மட்டுமே ஒரே நேரத்தில் திறமையான லெஃப்ட் ஆர்ம் ஸ்பின்னர் மற்றும் அணிக்கு மிகவும் நம்பிக்கையான தொடக்க ஆட்டக்காரராகவும் விளங்கினார்.

அவர் விளையாடிய காலத்தில் இந்திய அணி இன்னும் வளர்ந்து கொண்டிருந்த கிரிக்கெட் அணியாகவே இருந்தது. ஆனால் மன்கட் தனது திறமையால் உலகத்தரம் வாய்ந்த அணிகளுக்கு எதிராக இந்தியாவை நிலைநிறுத்தினார்.

<u>வினு மன்கட் கிரிக்கெட் சாதனைகள் – ஒரு விரிவான பார்வை:</u>
டெஸ்ட் ஆட்டங்கள்: 44
எடுத்த ரன்கள்: 2109
விக்கெட்: 162

ஒரு இந்திய வீரராக ஒரே போட்டியில் 5 விக்கெட்டுகள் + 100 ரன்கள் என்று சாதனை செய்த முதல்வீரரும் அவர்தான். 1952ல் இந்திய அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் செய்தபோது லார்ட்ஸ் மைதானத்தில் 184 ரன்கள் + 5 விக்கெட்டுகள் எடுத்தது வரலாற்று சாதனை. அந்தப்போட்டி இன்றுவரை “மன்கடின் ஆட்டம் (Mankad’s Match)” என்றுதான் அழைக்கப்படுகிறது.

1956 பங்கஜ் ராயுடன் இணைந்து 413 ரன்கள் எடுத்தது அவர் திறமை.

“மன்கட்” – சர்ச்சையும் அவரின் சாமர்த்தியமும்:

1947–48ல் இந்திய அணி ஆஸ்திரேலியா சென்றபோது ஆஸ்திரேலிய வீரர் பில் ப்ரவுன் நான்-ஸ்ட்ரைக்கர் இடத்தில் இருந்து பந்துபோடுவதற்கு முன்னதாக வெளியேறினார். அதைப் பயன்படுத்தி மன்கட் அவரை ரன்அவுட் செய்தார். இந்த செயல் “மன்கடிங் (Mankading)” என்று பின்னர் அழைக்கப்பட்டது.

முக்கியம்:
இது கிரிக்கெட் விதிகளில் சட்டப்பூர்வமானது. ஆனால் “ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட் (spirit of cricket)” குறித்துப் பெரியவிவாதத்தை உருவாக்கியது. இன்றுவரை கூட இந்த நடைமுறை, கிரிக்கெட்டில் சர்ச்சையாகவே உள்ளது.

மேலும் இவரின் அதிகம் பேசப்படாத சுவாரஸ்ய சம்பவங்கள்:

1. **இந்தியக் கிரிக்கெட்டின் செயல் குதிரை (பந்தயக் குதிரை) -** மன்கட் ஒரே போட்டியில் அதிக ஓவர்கள் வீசியவர். மேலும் சில போட்டிகளில் அவர் 70–80 ஓவர்கள் வரை தொடர்ந்து பந்துவீசியுள்ளார்.

2. **இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட் ஹீரோ**- அவர்தான் ஆம் 'Sussex County Cricket Club' அணிக்காக விளையாடி அங்கேயும் ரசிகர்களின் மனதை வென்றார்.

3. **தன்னைத் தானே வடிவமைத்த மன்கட்** - எந்தப் பெரிய அகடமியும் இல்லாமல் தனது திறமையைத் தானே உருவாக்கியவர். அந்தக் காலத்தில் எவ்வித உபகரணங்கள் இல்லாத நிலையிலும் உலகத்தரமான ஆட்டத்தைக் கொடுத்தது மிகப்பெரிய விஷயம்.

4. **இரண்டிலும் கலக்கும் மாவீரன் -** இன்று ஆல்ரவுண்டர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் ஓப்பனிங் பேட்ஸ்மேன் + ஸ்ட்ரைக் பந்துவீச்சாளர் என்ற இரட்டைப் பதவியை ஒரே அளவில் செய்தவர் அவர். இது மிகவும் அரிதாக நடக்கும் விஷயம்.

5. **உடற்தகுதி மற்றும் தளராமல் ஆடும் ஜாம்பவான்** - அந்தக் காலத்தில் நவீன பிட்னஸ் பயிற்சிகள் இல்லாதபோதும் அவர் உடல் திண்மை (stamina) இன்றுகூட ஒரு அளவுகோலாகப் பேசப்படுகிறது.

இந்தியாவின் உண்மையான முதல் ஆல்ரவுண்டர். கிரிக்கெட் விதிகளையும், நெறிமுறைகளையும் (ethics) விவாதிக்க வைத்தவர். அவர் இந்திய அணியின் ஆரம்பகால வளர்ச்சியின் முதுகெலும்பென்றால் அது மிகையில்லை. இன்று கபில்தேவ், ரவிச்சந்திரன் அஷ்வின் போன்ற வீரர்களின் பாதையை அமைத்த முன்னோடியும் அவர்தான்.

வினு மன்கட் என்பது ஒரு சாதாரண கிரிக்கெட் வீரர் பெயர் அல்ல. கிரிக்கெட் விளையாட்டில் ஒரு புரட்சி சிந்தனையாளர், ஒரு தன்னம்பிக்கையின் அடையாளம் மற்றும் இந்தியக் கிரிக்கெட்டின் அடித்தளம்.

“விதிகளைப் புரிந்து அதைப் பயன்படுத்தும் வீரர் தான் உண்மையான மாஸ்டர்” என்பதை மன்கட் தனது கிரிக்கெட் வாழ்க்கையால் நிரூபித்தார்.

கிரிக்கெட் உள்ளவரை அவர் பெயரும் விக்கெட்டில் நிலைத்திருக்கும்.

மறக்க முடியாத போட்டி

- சு. பழனி செல்வகுமார்

2006ல் டிஎல்எப் கோப்பை மலேசியாவில் நடைபெற்றது. இதில் இந்தியா, வெஸ்ட் இண்டீஸ், ஆஸ்திரேலியா அணிகள் ஆடின. அந்தத் தொடரில் 5வது போட்டியில் இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் ஆடிய போட்டி தான் மறக்க முடியாத போட்டி. முன்னதாக நடந்த போட்டியில் இந்தியா 309 ரன்கள் அடித்தது. சேஸ் செய்த வெஸ்ட் இண்டீஸ் 20 ஓவர்களில் 141 ரன்கள் அடித்து டிஎல்எஸ் முறையில் வென்றது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இந்தியா சேசிங்கில் 8 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்தது. மழை வந்ததால் போட்டி முடிவு இல்லாமல் போனது.

அந்தத் தொடரில் கங்குலி ஆடவில்லை. 5வது போட்டியில் இந்திய அணியில் இர்பான் பதான் இல்லை. வெஸ்ட் இண்டீஸ் அணியில் ஒரே ஒரு பந்துவீச்சாளர் கோரே காலிமோர் மட்டுமே இருந்தார். வெயின் பிராவோ, வெயின் ஸ்மித், கெயில் மற்றும் சாமுவேல்ஸ் இருந்தனர்.

இந்தியா முதலில் பேட்டிங் செய்தது. அப்போது சேவாக் பார்மில் இல்லை. சச்சின் டெண்டுல்கரோடு கேப்டன் டிராவிட் துவக்கவீரராகக் களமிறங்கினார். வெயின் ஸ்மித் தான் பந்துவீச்சைத் துவக்கினார். 3வது பந்தில் டிராவிட் அவுட். அடுத்து வந்த சேவாக் 3வது ஓவரில் அவுட்.

ரெய்னா 11 ரன்கள் எடுத்து 9வது ஓவரிலும், யுவராஜ் ரன் எதுவும் எடுக்காமல் 11வது ஓவரிலும் அவுட்டானர்கள். டெண்டுல்கர் மறுமுனையில் நின்றார். அடுத்து வந்த தோனி காலிமோர் வீசிய 14வது ஓவரில் 3 ஃபோர்கள் அடித்தார். 16வது ஓவரில் ஒரு ஃபோர் அடித்து அடுத்த பந்தில் அவுட்டானர். தொடர்ந்து 8வது ஓவர் வீசிய காலிமோருக்குப் பலன் கிடைத்தது. மறுமுனையில் ஸ்மித் தொடர்ந்து 10 ஓவர்களை வீசினார்.

அகர்கரும் வந்தவுடன் கிளம்ப, சச்சின் - ஹர்பஜன் ஓரளவுக்கு நின்று ஆடினர். ஹர்பஜன் 37 ரன்கள் எடுத்து அவுட்டானர். 102 பந்துகளில் 65 ரன்கள் எடுத்த சச்சின், நான்-ஸ்ட்ரைக்கர் முனையில் நேராக அடிக்கப்பட்ட பந்தால் ரன் அவுட் ஆனார். இந்தியா 162 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

சந்தர்பாலும், மோர்டானும் சேசிங்கைத் துவக்கினர். அகர்கரும், முனாப் பட்டேலும் பந்துவீசினர். 6வது ஓவர் வீச ஸ்ரீசாந்த் வந்தார். 9 ஓவர்களுக்குப் பிறகு இடைவேளை விடப்பட்டது. 13வது ஓவரில் முனாப், சந்தர்பாலை வெளியேற்றினார். 15வது ஓவரில் சர்வான் அவுட்டானார். 16வது ஓவரில் ஸ்ரீசாந்திடம் சிக்கினார் மோர்டான். 19வது ஓவரில் சாமுவேல்ஸ் அவுட்.

20வது ஓவரை ஆர் பி சிங் வீசினார். 22வது ஓவரில் கெயில் அவுட். ஆனாலும் லாரா களமிறங்கவில்லை. வெயின் ஸ்மித் தொடர்ச்சியாக 3 ஃபோர்கள் அடித்தார். அடுத்த ஓவரில் அவுட்டும் ஆனார்.

26வது ஓவரில் தான் சுழற்பந்தைக் கொண்டுவந்தார் டிராவிட். 28வது ஓவரில் ஹர்பஜன் வலையில் சிக்கினார் பிராவோ. வேவல் ஹிண்ட்ஸ் - லாரா

களத்தில். பெரிய பரபரப்பு இல்லை. வெஸ்ட் இண்டீஸ் எளிதாக ஜெயிக்கும் நிலை. 34வது ஓவரில் காட் அண்ட் பவுல்ட் முறையில் ஹிண்ட்ஸை வெளியேற்றினார் ஹர்பஜன். அப்போது வெஸ்ட் இண்டீஸ் 118/8. விக்கெட் கீப்பர் கார்ல்டன் பாஃ களமிறங்கினார். 40வது ஓவரில் பாஃ அவுட்டானார். வெற்றிக்கு 64 பந்துகளில் 18 ரன்கள் தேவை. கடைசிப் பேட்டராக காலிமோர், இன்னொரு முனையில் லாரா.

ஸ்ரீசாந்த் வீசிய 41வது ஓவரில் முதல் நான்கு பந்துகளில் ரன் எடுக்காத லாரா 5வது பந்தில் ஒரு ரன் எடுத்தார். ஆனால் கடைசிப்பந்தில் காலிமோர் எல்பிடபிள்யூ முறையில் அவுட்டடாக இந்தியா 16 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

குறைந்த ரன்களை வைத்துக்கொண்டு இந்தியா ஜெயித்தது ஒரு அதிசயம் என்றால், லாரா 9வது வீரராகக் களமிறங்கியது மர்மம்.

முத்தரப்பில் முக்கியமானவை

உலகக்கோப்பைக்கு முன்பாக ஸ்காட்லாந்து, பங்களாதேஷ் மற்றும் நெதர்லாந்து அணிகள் முத்தரப்பு டி20 தொடரில் ஆடின. அனைத்துப் போட்டிகளும் எடின்பர்க் நகரில் நடைபெற்றன.

மே 28 முதல் ஜூன் 4 வரை நடைபெற்ற இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் இரண்டு முறை மோதின. ஆனால் இறுதிப் போட்டி கிடையாது. இதில் ஸ்காட்லாந்து 3 போட்டிகளில் வென்று வெற்றியாளர் ஆனது.

நெதர்லாந்து அணி, முதல்முறையாக டி20 போட்டியில் பங்களாதேஷ் அணியை வென்றது. முதலில் பேட் செய்த நெதர்லாந்து ஹீதர் செய்கர்ஸ் 52 அரைசதத்தால் 162 ரன்கள் எடுத்தது. சேஸ் செய்த பங்களாதேஷ் அணியின் கேப்டன் நிகர் சுல்தானா 77 ரன்கள் அடித்தும் 154 ரன்களே எடுத்தது.

நெதர்லாந்துக்கு எதிரான இன்னொரு போட்டியில் பங்களாதேஷ் அணியின் திலார அஃதெர் 22 பந்துகளில் அரைசதம் அடித்தார். இதன் மூலம் சர்வதேச டி20 போட்டிகளில் அதிகவேக அரைசதம் அடித்த பங்களாதேஷ் வீராங்கனை ஆனார்.

அயர்லாந்து, பாகிஸ்தான் மற்றும் வெஸ்ட் இண்டீஸ் அணிகள் முத்தரப்பு டி20 தொடரில் ஆடின. இந்தத் தொடரும் மே 28 முதல் ஜூன் 4 வரை நடைபெற்றது. அனைத்துப் போட்டிகளும் டப்ளின் நகரில் நடைபெற்றன.

இந்தத் தொடரில் வெஸ்ட் இண்டீஸ் 2 போட்டிகளில் வென்று வெற்றியாளர் ஆனது. அயர்லாந்து அணி முதல்முறையாக வெஸ்ட் இண்டீஸ் அணியை டி20 போட்டியில் வென்றது.

அந்தப் போட்டியில் அயர்லாந்து கேப்டன் ஓர்லா பிரெண்டெர்காஸ்ட் 46 பந்துகளில் 71* ரன்கள் அடித்தார். அயர்லாந்து 1 ரன் வித்தியாசத்தில் வென்றது.

அயர்லாந்து, பாகிஸ்தான் அணியையும் வென்றது. தொடரில் இரண்டு போட்டிகள் மழையால் பாதிக்கப்பட்டன.

****

துளிகள்

ஆசியப் போட்டிகள் தகுதிச் சுற்றில் அந்த நாட்டில் பிறந்தவர்கள் மட்டுமே அந்த அணிக்காக விளையாட முடியும் என்று கட்டுப்பாடு விதித்ததால் கத்தார் அணி தொடரில் இருந்து வெளியேறியது. கத்தார் அணியில் பெரும்பான்மையினர் வேறு நாடுகளில் பிறந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாதப் போட்டிகள் - ஜூலை 2026				
தேதி	**ஆடும் அணிகள்**		**மைதானம்**	**போட்டி**
ஜூலை 1	இங்கிலாந்து	இந்தியா	செஸ்டர் லீ ஸ்ட்ரீட்	டி20
ஜூலை 3-7	வெஸ்ட் இண்டீஸ்	இலங்கை	ஆன்டிகுவா	டெஸ்ட்
ஜூலை 4	இங்கிலாந்து	இந்தியா	மான்செஸ்டர்	டி20
ஜூலை 6	ஜிம்பாப்வே	பங்களாதேஷ்	ஹராரே	ஒருநாள்
ஜூலை 7	இங்கிலாந்து	இந்தியா	நாட்டிங்காம்	டி20
ஜூலை 9	ஜிம்பாப்வே	பங்களாதேஷ்	ஹராரே	ஒருநாள்
ஜூலை 9	இங்கிலாந்து	இந்தியா	பிரிஸ்டல்	டி20
ஜூலை 11	ஜிம்பாப்வே	பங்களாதேஷ்	ஹராரே	ஒருநாள்
ஜூலை 11	இங்கிலாந்து	இந்தியா	சௌதம்ப்டன்	டி20
ஜூலை 11	வெஸ்ட் இண்டீஸ்	நியூஸிலாந்து	கயானா	ஒருநாள்
ஜூலை 13	வெஸ்ட் இண்டீஸ்	நியூஸிலாந்து	கயானா	ஒருநாள்
ஜூலை 14	இங்கிலாந்து	இந்தியா	பிர்மிங்கம்	ஒருநாள்
ஜூலை 15	ஜிம்பாப்வே	பங்களாதேஷ்	புலவாயோ	டி20
ஜூலை 16	இங்கிலாந்து	இந்தியா	கார்டிப்	ஒருநாள்
ஜூலை 16	வெஸ்ட் இண்டீஸ்	நியூஸிலாந்து	கயானா	ஒருநாள்
ஜூலை 17	ஜிம்பாப்வே	பங்களாதேஷ்	புலவாயோ	டி20
ஜூலை 19	ஜிம்பாப்வே	பங்களாதேஷ்	புலவாயோ	டி20
ஜூலை 19	இங்கிலாந்து	இந்தியா	லார்ட்ஸ்	ஒருநாள்
ஜூலை 19	வெஸ்ட் இண்டீஸ்	நியூஸிலாந்து	பர்படாஸ்	ஒருநாள்

துடுப்பாட்டம்

கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

இந்த மாதப் போட்டிகள் - ஜூலை 2026				
தேதி	**ஆடும் அணிகள்**		**மைதானம்**	**போட்டி**
ஜூலை 21	*நமீபியா*	*நேபாள்*	*உர்செட்*	*ஒருநாள்*
ஜூலை 21	*வெஸ்ட் இண்டீஸ்*	*நியூஸிலாந்து*	*பர்படாஸ்*	*ஒருநாள்*
ஜூலை 23	*நெதர்லாந்து*	*நேபாள்*	*உர்செட்*	*ஒருநாள்*
ஜூலை 23	ஜிம்பாப்வே	இந்தியா	ஹராரே	டி20
ஜூலை 25	ஜிம்பாப்வே	இந்தியா	ஹராரே	டி20
ஜூலை 23	*நெதர்லாந்து*	*நமீபியா*	*உர்செட்*	*ஒருநாள்*
ஜூலை 25-29	வெஸ்ட் இண்டீஸ்	பாகிஸ்தான்	டரோபா	டெஸ்ட்
ஜூலை 26	ஜிம்பாப்வே	இந்தியா	ஹராரே	டி20
ஜூலை 27	*நமீபியா*	*நேபாள்*	*உர்செட்*	*ஒருநாள்*
ஜூலை 29	*நெதர்லாந்து*	*நேபாள்*	*உர்செட்*	*ஒருநாள்*
ஜூலை 31	*நெதர்லாந்து*	*நமீபியா*	*உர்செட்*	*ஒருநாள்*

பரோடா பிரீமியர் லீக்

குஜராத் மாநிலத்தின் பரோடாவைத் தலைமையிடமாகக் கொண்ட பரோடா பிரீமியர் லீக்கின் 2வது சீசன் ஜூன் 1 முதல் ஜூன் 14 வரை நடைபெற்றது.

அலெம்பிக் வாரியர்ஸ், ஏ4 பவர் ஸ்ட்ரைக்கர்ஸ், டைமண்ட் டாஸ்லர்ஸ், பிரித்வி பேந்தர்ஸ், அமி சூப்பர் அவென்ஜர்ஸ் என 5 அணிகள் பங்கேற்றன.

<u>எலிமினேட்டர், ஜூன் 12</u>

பிரித்வி பேந்தர்ஸ் - 168/9

பர்த் கோலி - 53

தீப் படேல் - 2/21

டைமண்ட் டாஸ்லர்ஸ் - 170/4

அமித் பண்டாரி - 54

பிரியான்ஷ் மோலியா - 2/29

டைமண்ட் டாஸ்லர்ஸ் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

<u>குவாலிபயர் 1, ஜூன் 12</u>

ஏ4 பவர் ஸ்ட்ரைக்கர்ஸ் - 196/8

ஹர்ஷ் தேசாய் - 76

லக்சித் தோஸியா - 2/30

அலெம்பிக் வாரியர்ஸ் - 159

உத்சவ் தயா சௌத்ரி - 30

கெயூர் காலே - 4/33

ஏ4 பவர் ஸ்ட்ரைக்கர்ஸ் 37 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

<u>குவாலிபயர் 2, ஜூன் 13</u>

அலெம்பிக் வாரியர்ஸ் - 172/8

துருவ் படேல் - 53

அபிஷேக் சுவாமிநாதன் - 2/23

டைமண்ட் டாஸ்லர்ஸ் - 124

சஸ்வத் ராவத் - 42

பிரதீப் யாதவ் - 3/21

அலெம்பிக் வாரியர்ஸ் 48 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

<u>இறுதிப் போட்டி, ஜூன் 14</u>

அலெம்பிக் வாரியர்ஸ் - 159/6

ஆயுஷ் ராஜ்கோர் - 57*

ராம் பர்வத் - 2/28

ஏ4 பவர் ஸ்ட்ரைக்கர்ஸ் - 164/4

ஷிவாலிக் சர்மா - 44*

சஃப்வன் படேல் - 2/27

ஏ4 பவர் ஸ்ட்ரைக்கர்ஸ் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

<u>இங்கிலாந்து - நியூசிலாந்து</u>

நியூசிலாந்து அணி இங்கிலாந்து சென்று 3 டெஸ்ட் போட்டிகளில் ஆடியது. நியூசிலாந்து அணியின் கேப்டனாக டாம் லாத்தம் செயல்பட்டார். முதல் டெஸ்ட் லார்டஸ் மைதானத்தில் நடைபெற்றது. இங்கிலாந்து அணியில் துவக்கவீரர் எமிலியோ கே அறிமுகமானார். டாஸ் வென்று நியூசிலாந்து பந்து வீசியது.

முதல் நாளில் மழை குறுக்கீடு, போதிய வெளிச்சமின்மை போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டன. தேனீர் இடைவேளைக்குப் பிறகு இங்கிலாந்து 140 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. கைல் ஜேமிசன் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி, லார்ட்ஸ் பெயர்பலகையில் இடம்பெற்றார். நாதன் ஸ்மித் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஹாரி புரூக் 56 ரன்கள் அடித்தார்.

முதல் நாள் அத்தோடு முடிந்து விடவில்லை. நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுகளை இழந்தது. முதல் நாளில் மொத்தம் 16 விக்கெட்டுகள் வீழ்ந்தன. 60 ஓவர்கள் வீசப்பட்டன.

2ம் நாள் துவக்கத்திலே நியூசிலாந்து 113 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஆலி ராபின்சன் 5 விக்கெட்டுகளையும், ஜோஷ் டங்க் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். கைல் ஜேமிசன் 38 ரன்கள் அடித்தார்.

சிறிய முன்னிலை தந்த தெம்புடன் ஆடியது இங்கிலாந்து. தேனீர் இடைவேளையைத் தாண்டி ஆடி 226 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. எமிலியோ கே அரைசதம் (57) அடித்தார். நாதன் ஸ்மித் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

2ம் நாள் முடிவில் நியூசிலாந்து 3 விக்கெட்டுகளை இழக்க, 2ம் நாள் 17 விக்கெட்டுகள் தினமாக முடிந்தது. மழை கிழித்துப் போட்ட 3ம் நாளில் நியூசிலாந்து மேலும் 2 விக்கெட்டுகளை இழந்தது. 254 ரன்களைத் துரத்திய நியூசிலாந்து 4ம் நாளில் 138 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக க்ளென் பிலிப்ஸ் 44* ரன்கள் அடித்தார். ஹஸ் அட்கின்சன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இங்கிலாந்து 115 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - ஆலி ராபின்சன் - 1, 5/39, 29 & 2/38

2வது டெஸ்ட்க்கு முன்பாக சில சம்பவங்கள் நடைபெற்றன. கேன் வில்லியம்சன் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தார். இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் ஒழுங்கு நடவடிக்கை காரணமாக பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஹஸ் அட்கின்சனை 2வது டெஸ்டில் ஆடத் தடைவிதித்தது. ஜோ ரூட் கேப்டனாக செயல்பட்டார். ஜேம்ஸ் ரூ, ஜோர்டன் காக்ஸ் மற்றும் சோனி பேக்கர் அறிமுகமானார்கள். நியூசிலாந்து அணியில் ஹென்றி நிக்கோல்ஸ் இடம்பெற்றார். நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்தது.

முதல் நாளில் டாம் ப்ளென்டல் அரைசதத்தால் (51), 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 291 ரன்கள் எடுத்தது. 2ம் நாளில் க்ளென் பிலிப்ஸ் சதமடிக்க (100), உணவு இடைவேளைக்கு முன்பு 391 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. ஜேக்கப் பெத்தேல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். எமிலியோ கே அரைசதம் (53) அடித்தார். 2ம் நாள் முடிவில் இங்கிலாந்து 6 விக்கெட்டுகளை இழந்து 222 ரன்கள் எடுத்தது.

3ம் நாள் உணவு இடைவேளையின் போது 291 ரன்களுக்கு ஆட்டமிழந்தது இங்கிலாந்து. மேத்யூ பிஸ்ஸர் (50*) அரைசதம் அடித்தார். மாட் ஹென்றி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஹென்றி நிக்கோல்ஸ் சதமடிக்க 3ம் நாள் முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 252 ரன்கள் எடுத்தது நியூசிலாந்து.

4ம் நாள் உணவு இடைவேளைக்குப் பிறகு நியூசிலாந்து 362 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஹென்றி நிக்கோல்ஸ் 121 ரன்களும், ரச்சின் ரவீந்திரா 76 ரன்களும், டேரில் மிட்செல் 68 ரன்களும் அடித்தனர். ஆர்ச்சர் & பிஸ்ஸர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். 4ம் நாள் முடிவில் இங்கிலாந்து 182 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்தது.

5ம் நாளில் இங்கிலாந்து 209 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஜோ ரூட் (77) மற்றும் ஹாரி புரூக் (58) அரைசதம் அடித்தனர். மாட் ஹென்றி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். கைல் ஜேமிசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நியூசிலாந்து 253 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - மாட் ஹென்றி - 5/80 & 6/29

3வது டெஸ்ட் நாட்டிங்காமில் நடைபெற்றது. இங்கிலாந்து அணிக்கு ஸ்டோக்ஸ், ஸ்மித், அட்கின்சன் திரும்பினர். நியூசிலாந்து அணியில் காயம் காரணமாக மாட் ஹென்றி மற்றும் க்ளென் பிலிப்ஸ் இடம் பெறவில்லை. நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்தது.

டாம் லாத்தம் (151) - டேவோன் கான்வே (157) இணை சிறப்பாக ஆடி முதல் விக்கெட்டுக்கு 317 ரன்கள் சேர்த்தது. முதல் நாளில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 361 ரன்கள் சேர்த்தது.

2ம் நாளில் 438 ரன்களுக்கு ஆட்டமிழந்தது நியூசிலாந்து. பென் ஸ்டோக்ஸ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இங்கிலாந்து 2ம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 223 ரன்கள் எடுத்தது. பென் டக்கெட் சதமும் (113), ஜேக்கப் பெத்தேல் அரைசதமும் (74) அடித்தனர்.

3ம் நாள் தேநீர் இடைவேளையின் போது இங்கிலாந்து 354 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. நாதன் ஸ்மித் 4 விக்கெட்டுகளையும், வில் ஓ ரூர்க்கி & ஸாக் பவுல்க்ஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ஹாரி புரூக் அரைசதம் (58) அடித்தார். பேட்டிங்கின் போது ஹெல்மெட்டில் அடிபட்ட ப்ளேர் டிக்னர் 3 ஓவர்கள் பந்துவீசினார். ஆனால் அதற்குப்பிறகு அவர் உடல்நலம் பாதிக்கப்பட கண்கஸன் சப்ஸ்டியூட்டாக ஸாக் பவுல்க்ஸ் களமிறங்கினார். 3ம் நாள் முடிவில் நியூசிலாந்து 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 120 ரன்கள் எடுத்தது. ரச்சின் ரவீந்திரா அரைசதம் அடித்தார்.

4ம் நாளில் ரச்சின் ரவீந்திரா 94 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். டேரில் மிட்செல் சதமடித்ததும் நியூசிலாந்து டிக்ளேர் (288/9) செய்தது. ஆர்ச்சர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். தனது கடைசி டெஸ்ட் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் துவக்கவீரராகக் களம் இறங்கினார். இதன் மூலம் பேட்டிங்கில் 1 முதல் 11வது வரிசையில் களமிறங்கிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார். 4ம் நாள் முடிவில் இங்கிலாந்து 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 103 ரன்கள் எடுத்தது.

5ம் நாளில் ஜேமி ஸ்மித் அரைசதம் (60) அடித்தார். இங்கிலாந்து 212 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது. ஸாக் பவுல்க்ஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நியூசிலாந்து 160 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. தொடரையும் 2-1 என வென்றது.

ஆட்டநாயகன் - டேரில் மிட்செல் - 100* & 5 கேட்ச்கள்

தொடர் நாயகன் - நாதன் ஸ்மித் - 16 விக்கெட்டுகள்

ஜோப்ரா ஆர்ச்சர் - 11 விக்கெட்டுகள்

பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா

பாகிஸ்தானில் ஒருநாள் தொடரைத் தோற்ற ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் சென்று 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகளில் ஆடியது. ஒருநாள் போட்டிகள் மிர்பூரிலும், டி20 போட்டிகள் சாட்டோகிராமிலும் நடைபெற்றன.

முதல் ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியா அணியில் லியாம் ஸ்காட் அறிமுகம் ஆனார். பங்களாதேஷ் அணியில் நீண்ட நாட்களுக்குப் பிறகு மொசடெக் ஹோசைன் இடம்பெற்றார். முதல் பேட்டிங் செய்த பங்களாதேஷ் தான்ஸித் ஹசன் (54), சாண்டோ (67) மற்றும் மொசடெக் ஹோசைன் (86*) அரைசதங்களால் 284 ரன்கள் எடுத்தது. நாதன் எல்லிஸ் 3 விக்கெட்டுகளையும், ஸ்காட் மற்றும் ரென்ஷா தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

மழை காரணமாக இரண்டாம் இன்னிங்ஸ் தாமதமாகத் துவங்கியது. ஆஸ்திரேலியா மோசமாக ஆடியது. கேமரூன் க்ரீன் 52* ரன்கள் அடித்தார். 43வது ஓவரில் மழை வந்ததால் பங்களாதேஷ் 86 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. நாகித் ராணா 4 விக்கெட்டுகளையும், முஸ்டாபிசூர் மற்றும் மொசடெக் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - மொசடெக் ஹோசைன் - 86* & 2/37

2வது போட்டியில் ஆஸ்திரேலியா முதலில் பேட்டிங் செய்தது. ஆஸ்திரேலியா அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. 7வது விக்கெட் இணை லபுசேன் (55*) - பார்ட்லெட் (52) 103 ரன்கள் சேர்த்தது. ஆஸ்திரேலியா 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 187 ரன்கள் சேர்த்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. ஆஸ்திரேலியா தொடர்ந்து ஆடவில்லை. தஸ்கின் அகமது மற்றும்

முஸ்டாபிசூர் ரஹ்மான் தலா 3 விக்கெட்டுகளையும், தன்வீர் இஸ்லாம் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

41 ஓவர்களில் 192 ரன்கள் என்ற இலக்கைத் துரத்தியது பங்களாதேஷ். சர்கார், சாண்டோ மற்றும் ஹிரிடோய் தலா 40+ ரன்கள் அடிக்க 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. முதல்முறையாக ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஒருநாள் தொடரையும் வென்றது பங்களாதேஷ்.

ஆட்டநாயகன் - முஸ்டாபிசூர் ரஹ்மான் - 3/27

3வது போட்டியில் கேப்டன் மெகிதி ஹசன் மிராஸ் காயம் காரணமாக ஆடவில்லை. சாண்டோ பொறுப்புக் கேப்டனாக செயல்பட்டார். லிட்டன் தாஸ் (58*), ஹிரிடோய் (83), மொசடெக் (56*) அரைசதங்களால் பங்களாதேஷ் 274 ரன்கள் எடுத்தது. பார்ட்லெட் & ரென்ஷா தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் போனாலும் கூப்பர் கொன்னலி சிறப்பாக ஆடினார். 149 ரன்கள் எடுத்து அவர் 49வது ஓவரில் அவுட்டாகும்போது வெற்றிக்கு 5 ரன்களே தேவைப்பட்டன. ஆஸ்திரேலியா 1 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. சோரிபுல் இஸ்லாம் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - கூப்பர் கொன்னலி - 149

தொடர் நாயகன் - மொசடெக் ஹோசைன் - 157 ரன்கள் & 2 விக்கெட்டுகள்.

<u>டி20 தொடர்</u>

ஆஸ்திரேலிய அணிக்குக் கேப்டன் மிட்செல் மார்ஷ் திரும்பினார். பங்களாதேஷ் கேப்டன் லிட்டன் தாஸ் காயமடைந்ததால் டௌகித் ஹிரிடோய் கேப்டனானார். முதல்போட்டியில் ஆஸ்திரேலிய அணியில் நிகில் சௌத்ரி,

ஜோயல் டேவிஸ் பங்களாதேஷ் அணியில் அப்துல் கப்பார் சக்லைன் ஆகியோர் அறிமுகமானார்கள்.

ஆஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர்கள் ஆடம் ஸாம்பா 3, ஜோயல் டேவிஸ் 3, மாட் ரென்ஷா 2 என விக்கெட்டுகளை வீழ்த்த பங்களாதேஷ் 131 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக மகேதி ஹசன் 29* ரன்கள் அடித்தார்.

கூப்பர் கொன்னலி 47, மற்றவர்களின் சிறிய பங்களிப்பு மூலமாக ஆஸ்திரேலியா இலக்கை எட்டியது. அப்துல் கப்பார் சக்லைன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - ஆடம் ஸாம்பா - 3/18

2வது போட்டியில் ரென்ஷா (89*) மற்றும் டிம் டேவிட் (45) அதிரடியால் 196 ரன்கள் எடுத்தது. நசும் அகமது 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பவர்பிளேவில் சிறப்பாக ஆடிய பங்களாதேஷ், 20 ஓவர்களில் 189 ரன்கள் எடுத்து 7 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது. ஆரோன் ஹார்டி 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதிகபட்சமாக பர்வீஸ் ஹோசைன் 36 ரன்கள் அடித்தார்.

ஆட்டநாயகன் - மாட் ரென்ஷா - 89* & 1/13

3வது போட்டியில் முதலில் பேட் செய்த பங்களாதேஷ் 108 ரன்கள் மட்டுமே எடுத்தது. கேப்டன் ஹிரிடோய் 61* ரன்கள் அடித்தார். ஸ்பென்சர் ஜான்சன், நாதன் எல்லிஸ் மற்றும் ஆடம் ஸாம்பா தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

மிட்செல் மார்ஷின் அதிரடி அரைசதத்தால் (60) ஆஸ்திரேலியா 11வது ஓவரிலே 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - மிட்செல் மார்ஷ் – 60

தொடர் நாயகன் - மாட் ரென்ஷா - 113 ரன்கள் & 3 விக்கெட்டுகள்.

<u>ஆந்திரா பிரீமியர் லீக்</u>

ஆந்திரா பிரீமியர் லீக், விசாகப்பட்டினம் கடப்பா மற்றும் மங்களகிரியில் ஜூன் 9 முதல் ஜூன் 30 வரை நடைபெற்றது. சிம்மாத்ரி வைசாக் லயன்ஸ், காக்கிநாடா கிங்ஸ், துங்கபத்ரா வாரியர்ஸ், அமராவதி ராயல்ஸ், விஜயவாடா சன்ரைசர்ஸ், பீமாவரம் ஃபுல்ஸ், ராயல்ஸ் ஆஃப் ராயலசீமா என ஏழு அணிகள் பங்கேற்றன.

<u>எலிமினேட்டர், ஜூன் 28</u>

சிம்மாத்ரி வைசாக் லயன்ஸ் - 84/6 (6)

கோகடம ஹனீஷ் ரெட்டி - 36

பிரனவ் ரெட்டி - 2/38

விஜயவாடா சன்ரைசர்ஸ் - 68/6 (6)

ஷேக் ஜாகிர் அப்பாஸ் - 21*

திரிபுராணா விஜய் - 2/15

சிம்மாத்ரி வைசாக் லயன்ஸ் 16 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

<u>குவாலிபயர் 1, ஜூன் 28</u>

அமராவதி ராயல்ஸ் - 164/9

கிர்தந்த் கரண் ஷிண்டே - 58

சென்னுபடி ரவிதேஜா - 3/41

பீமாவரம் ஃபுல்ஸ் - 168/2

ஹேமந்த் ரெட்டி - 57

யஷ்வந்த் கொல்லபுடி - 1/21

பீமாவரம் ஃபுல்ஸ் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

<u>குவாலிபயர் 2, ஜூன் 29</u>

சிம்மாத்ரி வைசாக் லயன்ஸ் - 243/5

நிம்மல ஹிமாகர் - 115

பண்டாரு ஐயப்பா - 4/59

அமராவதி ராயல்ஸ் - 186

சீரம் வெங்கட ராகுல் - 48

ஸ்ரீகாந்த் - 4/34

சிம்மாத்ரி வைசாக் லயன்ஸ் 57 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

<u>இறுதிப் போட்டி, ஜூன் 30</u>

சிம்மாத்ரி வைசாக் லயன்ஸ் - 139/8

திரிபுராணா விஜய் - 39*

சென்னுபடி ரவிதேஜா - 3/22

பீமாவரம் ஃபுல்ஸ் - 140/0

ரேவந்த் ரெட்டி - 71*

பீமாவரம் ஃபுல்ஸ் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.

ரசிகன்

1. துடுப்பாட்டம் இதழைத் தொடர்ந்து வாசிக்கிறீர்களா? நிறை, குறை என்ன?

தொடர்ந்து என்று சொல்ல ஆசைதான். உண்மையா சொல்லனும்னா புதிதாய் ஒரு இதழ் வெளிவரும்போதும், நேரம் கிடைக்கும்போதும் அப்பப்போ சில பல பக்கங்கள் பொரட்டிப்பாக்கறது வழக்கம். நிறைகள் நிறைய. சொல்ல இந்த இடம் போதாது. குறிப்பிட்டுச் சொல்லனும்னா உங்களுடைய பறந்து விரிந்த கவரேஜ். ஐபிஎல், பிக்பாஸ், T20 மற்றும் மகளிர் உலகக்கோப்பை, விஜய் ஹசாரே தொடர் அப்பப்பா, ஸ்கூல்ல பசங்க விளையாடும் புக் கிரிக்கெட் தான் இன்னும் கவர் பண்ணல. இது மட்டுமா கட்டுரைகள், துணுக்குச் செய்திகள்ன்னு எடுக்க எடுக்கக் குறையாத அக்ஷயப்பாத்திரம். குறைகள் அதிகம் இல்லை. இன்னும் சிறப்பா கண்கவரும் விதமாய் மெருகேற்றலாம், இதழ்களின் பின்னே உள்ள குழுவின் அட்டகாசமான அயராத உழைப்பு (எத்தன பேர் கன்டென்ட் சேகரிக்கறீங்க?) + அது கொண்டுவரும் எல்லையில்லா செய்திகள் போன்றவைக்கு ஏதுவாய் இன்னும் சிறப்பாய் அமையும்.

2. உங்களுக்குப் பிடித்த வீரர் யார்? ஏன்?



செவிவழி கேட்கத் தொடங்கிய நாள்களில் பட்டோடி, பிராட்மேன், விஸ்வநாத், பிரசன்னா ஆரம்பித்து டிவியில் பார்க்க ஆரம்பித்த நாள்களில் கபில்தேவ், ஸ்ரீகாந்த், வால்ஷ், ரிச்சர்ட்ஸ், வெங்சர்க்கார் பின்பு சச்சின், டிராவிட், லாரா, மெக்ராத், ஸ்டெய்ன், முரளி, தோனி இந்தக்கால சூர்யவன்ஷி, பும்ரா என இன்னும் சொல்லாத நிறைய பேர் வந்தாலும் போனாலும் இருந்தாலும் மிகப்பிடித்த வீரராய் அடிமனதில் சம்மணமிட்டு அன்றும் இன்றும் என்றும் சச்சின்தான். காரணம், களமிறங்கும்போது ஒவ்வொரு முறையும் கோடானு கோடி மக்களின் எதிர்பார்ப்பை வேறு தோள்கள் சுமக்கவில்லை.

சுமக்கப்போவதும் இல்லை. அவர் களத்தில் இருக்கும்வரை தோல்வி பற்றிய கவலை வந்ததில்லை.

3. மகளிர் உலகக் கோப்பை எந்த அணி வெல்ல வாய்ப்புள்ளது?

உலகக் கோப்பை விளையாட்டுகளுக்குத் தேர்வான எல்லா அணிகளுக்கும்...

4. இந்த ஆண்டு ஐபிஎல் தொடரில் உங்களைக் கவர்ந்த வீரர்?

இளம் வயதில் எல்லாருடைய மனதைக் கவர்ந்த பவுலர்களுக்கு சிம்மசொப்பனமாயிருந்த வைபவ் சூர்யவன்ஷி. எல்லாப் பந்தையும் எப்படியும் பவுண்டரிக்கு அனுப்ப எப்படித்தான் மனசு நினைக்குமோ. இன்னும் எல்லாப் பந்திலும் 6 அடிச்சு 9 பந்தில் 50 அடிக்கல, சீக்கிரம் பண்ணிடுவாப்ல.

5. உங்களுக்கு மிகவும் பிடித்த கிரிக்கெட் போட்டி?

2004 இந்தியா - ஆஸ்திரேலியா நான்காம் டெஸ்ட் போட்டி, சிட்னி

சச்சின் டெண்டுல்கரின் அசாத்தியமான சுயகட்டுப்பாட்டிற்கு சான்றாக விளங்கியதால் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு மறக்க முடியாத போட்டியாக, எனக்கு என்றும் பிடிக்கும் போட்டியாய் நிலைத்து நிற்கிறது.

தொடரின் முந்தைய போட்டிகளில் ஆஃப்-ஸ்டம்பிற்கு வெளியே சென்ற பந்துகளை அடிக்க முயன்று (கவர் ட்ரைவ்) தொடர்ந்து ஆட்டமிழந்ததால், தனக்கு மிகவும் பிடித்த, எல்லாராலும் போற்றத்தக்க, பார்த்தால் மனம் வசியம் செய்யும் அந்த ஷாட்தான் தனது பலவீனம் என்பதை சச்சின் உணர்ந்த தருணம். முந்தைய மூன்று ஆட்டங்களில் சொற்ப ரன்கள் (0, -, 1, 37, 0, 44), 2 டக் அவுட் வேறு.

இதனால், களம் இறங்குவதற்கு முன்பாகக் கவர் டிரைவ் ஷாட்டை அறவே தவிர்ப்பது என்று ஒரு உறுதியான சபதத்தை மனதுக்குள் எடுத்தார். ஆஃப்-ஸ்டம்பிற்கு வெளியே வந்த பந்துகளைத் தொடர்ந்து தவிர்த்தும், லெக் சைடில் பந்துகளை லாவகமாகத் திசைதிருப்பியும், 10 மணி நேரத்திற்கும் மேலாக அதீத ஒழுக்கத்துடன் தனது திட்டத்தைக் களத்தில் செயல்படுத்தினார். 50 ..100..150..200..220 ரன்கள் அடித்தும் ஆஃப் சைடில் தனது இயல்பான ஸ்ட்ரோக் அவர் ஆடாதது எதிர் அணி மட்டுமல்லாது உலகையே வியக்க வைத்தது.

மனவலிமையின் உச்சக்கட்டமாக அமைந்த இந்த ஆட்டம், ஆட்டமிழக்காமல் 241 ரன்களைப் பெற்றுத் தந்து இந்திய அணி தோற்காமல் இருக்க வைத்தது.

உண்மையான திறமை என்பது இயல்பான ஆட்டத்தில் மட்டுமல்ல, கடுமையான சுயகட்டுப்பாட்டிலும் சமயசந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நாம் கொண்டுவரும் மாற்றத்திலும் தான் உள்ளது என்பதை உலகிற்கு நிரூபித்தது. நினைத்தாலும் நம்பமுடியாத அசாத்திய நிகழ்வு இது.

நமக்கு ரொம்பவே பிடித்த விஷயமாக இருந்தாலும், நம் வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் என்றால் அதைக் கண்டறிந்து சந்தர்ப்பங்கள் அதிகமாய் வந்தாலும் அதை அறவே தவிர்ப்பது சச்சின் அன்று நம் எல்லோருக்கும் கற்றுத் தந்த வாழ்க்கைப்பாடம்.

6. ஒருநாள் போட்டிகள் குறைந்து வருவது குறித்து உங்கள் கருத்து…

காலத்துக்கேற்ற மாற்றம் என்பேன். கபில்தேவ் அடித்த 175, சச்சின் ஷார்ஜாவில் செய்த மாயம், இந்தியாவின் உலகக்கோப்பை வெற்றி(கள்) என சில பல நினைவுப் பெட்டகப் பொக்கிஷங்கள் இருந்தாலும் நிகழ்காலத்தில் 7-8 மணி நேரம் உக்காந்து பார்ப்பது சற்றுச் சிரமம்தான். குறிப்பாக 11-40 ஓவர்களில் அடிக்கடி நாம் காணும் தோய்வு, இரண்டு புதுப்பந்துகள், அதிகம் ரிவர்ஸ் ஸ்விங் இல்லாதது, பீல்டிங் கட்டுப்பாடுகள் என நிறைய விஷயங்கள் சுவாரஸ்யம் குறைக்கின்றன. இன்னமும் குறையும். முற்றிலும் அழியாது.

7. இந்திய அணித்தேர்வுகள், அணித்தலைவர் குறித்து உங்களின் பொதுவான கருத்து?

எனக்குத் தனிப்பட்ட கருத்து உண்டு. அது சொல்லக்கூடாதா? பொதுவாத்தான் சொல்லனுமா?

ஷ்ரேயஸ் ஐயர், சூரியவன்ஷி, பும்ரா போன்ற அதிரடி தைரியமான தீர்மானங்கள். முந்தைய தேர்வுகளை விட ரொம்பவே மாறுதல். அதிகம் அரசியல் இல்லை. இந்தத் தேர்வுகளில் ஆரம்பகால பின்னடைவுகள் இருக்கலாம். ஆனால் சர்வதேச அரங்கில் இந்தியா வலுவாய் காலோச்ச இந்தகைய தேர்வுகள் தேவை என்பேன். பொறுத்திருந்து பார்ப்போம்.

8. சமீபமா இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் பென் ஸ்டோக்ஸ் & கஸ் ஆட்கின்சன் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்து உங்கள் கருத்து?

நியாயமானதுதான். நாடே போற்றும் இளவயது ரசிகர்கள் வியந்து பார்த்து பின்னேசெல்லும் தலைசிறந்த வீரர்களுக்குக் களத்தில் இருக்கும்/காட்டும் திறமை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் களத்திற்கு வெளியேயும் எனத்தெரிவது மிக அவசியம். விதிமுறைகள் மீறி இருவரும் இரவு வெளியே சென்றதால் மட்டுமல்லாமல் ஏற்கனவே 2017 பிரிஸ்டலில் பென் ஸ்டோக்ஸ் ஒரு சம்பவத்தில் மாட்டியதாலும், இந்தச் சம்பவத்தில் ஒரு ECB காவலாளி தாக்கப்பட்டிருப்பதாலும் ECB அதிரடியாய் இவர்களை டீம் விட்டு வெளியேற்றி மேலும் அவப்பெயர் வராமல் பாத்துக்கொண்டது. இதன் விலை, இரண்டாவது டெஸ்ட் தோல்வி.

9. மற்ற விளையாட்டுகளில் இருந்து துடுப்பாட்டம் (கிரிக்கெட்) ரசிகர்களின் பார்வையில் எவ்வாறு வேறுபடுகிறது?

மற்ற விளையாட்டுகளைவிட துடுப்பாட்டம் ரசிகர்கள் பார்வையில் நிறையவே வேறுபடும். கால்பந்து, கூடைப்பந்து மாதிரி அல்லாமல் அதிவேக அதிரடித் திருப்பங்கள் அதிகம் நிறைந்த விளையாட்டு அல்ல. ரேடியோ வர்ணனையோ, வெப்பேஜ் ஸ்கோர் அப்டேட்டோ இன்னொரு ஜீவனாய் நம்மோடு கைகோர்த்து பேசிக்கொண்டே ஒரு பக்கம் நிதானமாய் பயணிக்கும். மறுபக்கம் டி எல் எஸ், டி ஆர் எஸ், நெட் ரன்ரேட், தேவைப்படும் ரன்ரேட், பிட்ச் டைனமிக்ஸ், பவர்பிளே, பால் டிராக்கிங் (Ball Tracking), ஹாக்காய் (HawkEye) இப்படிப் பல விஷயங்களில் ஏதோவொன்றில் மண்டை சூடேற்றி நம்மை பிபி மாத்திரை போடவும் வைக்கும்.

அதுமட்டுமா, நிதான டெஸ்ட், அதிரடி ஒருநாள் போட்டிகள், சரவெடி டி20 என ரசிகர்கள் கொண்டாட பலவகை தருவதும் துடுப்பாட்டம் விளையாட்டு ஒன்றுதான்.

10. துடுப்பாட்டம் மாத இதழ் அச்சுப் பிரதியாக வந்தால்?

மனித இனத்தின் உன்னத விளையாட்டுக்காகவும் அழகிய நம் தமிழ் மொழியில் அதை அச்சிடுவதற்காகவும் ஆசிரியர் குழுவில் உள்ள நம் அன்பு நண்பர்களுக்காகவும் நிறையப் பேர் வாங்க வேண்டும். பல கைகளில் தவழ வேண்டும். வாழ்த்துகள்.

ரசிகர் குறித்து

ராகவ், பணி நிமித்தமாக இங்கிலாந்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். வடிவமைப்புத் துறை வல்லுனர். இவர் தமிழ் மீதும், இசை மீதும் தீராத பற்றுக்கொண்டவர். இணையத்தில் இவரின் இசைப்புதிர் மிகவும் பிரபலமானது. துடுப்பாட்டம் இதழைத் தொடர்ந்து பின்பற்றி வருபவர். அவ்வப்போது ஆலோசனையும் வழங்கி வருகிறார்.

கடைசிப் பக்கம்

இந்தியா - ஆப்கானிஸ்தான் ஒருநாள் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட போட்டி, கடும் வெயிலில் முதல் பேட்டிங், அடுத்த போட்டியில் சேஸிங் என அனைத்துப் பரிசோதனை முயற்சிகளையும் இந்தியாவிற்குத் தந்தது.

ஒற்றைப் புள்ளியில் பேட்டிங், பவுலிங், பீல்டிங் என எதில் வேண்டுமானலும் சொதப்பும் இந்திய அணி உலகக்கோப்பை முதல் சுற்றில் வெளியேறியுள்ளது. ஆனாலும் வாழ்த்துக்கள்.

ஜூலையில் இங்கிலாந்து - இந்தியா தொடர், ஜிம்பாப்வே - பங்களாதேஷ் தொடர், ஜிம்பாப்வே - இந்தியா தொடர், வெஸ்ட் இண்டீஸ் - நியூசிலாந்து தொடர், வெஸ்ட் இண்டீஸ் - பாகிஸ்தான் தொடர் என, நிறையத் தொடர்கள் காத்திருக்கின்றன. தமிழ்நாடு பிரீமியர் லீக் ஜூலை இறுதியில் தொடங்குகிறது..

மீண்டும் சந்திப்போம்!

Mail – thuduppattam7@gmail.com

X - @thuduppattam

www.thuduppattam.blogspot.com

Whatsapp - +91 80566 09320